20 காசு

காஞ்சி

3-8-69 நிறுவனர்: அண்ணாதுரை

உள்ளே....

சுகஸ்தான்வாசி! (மடல்)

அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்! (தலையங்கம்)

கொள்ளை! (கவிதை)

அன்றுகண்ட கனவு!

சாவு-மனித இயற்கையின் மாருத விதியா?

அது என்ன கண்ணீரோ!

கேட்டீரா சேதி?

கேள்வி-பதில்



கண்டிக்கிறோம்!

இந்தக் கிழமை 28—7—69ம் நாள் இரவு 9-15க்கு சென்னை வானொலி நிலையத்தினர் "மத்திய, மாநில உறவு—அதிகாரப் பங்கீடு" என்ற தலைப்பில் ஒரு விவாதஅரங்கு ஏற்பாடு செய்து ஒலி பரப்பினர். விவாதத்தில் கழக எம். எல். ஏ.யும் வழக்கறிஞருமான கே. வேழவேந்தன், மற்றும் ஏ. ஜி. வெங்கடாச்சாரி, என். எம். மணிவர்மா ஆகிய மூவரும் பங்கு கொண்டிருந்தனர். விவாத மேடைத் தலைவராக ஏ. ஜி. வி. அவர்களே இருந்ததாகத் தெரிகிறது. திரு. ஏ. ஜி. வி. அவர்கள், விவாதத்தைத் தொடங்கி வைக்கும்போதே, மத்திய மாநில உறவுகள் சுமுகமாகவே இருப்பது போன்றும், புதிய அதிகாரப் பங்கீடுகள் எதுவும் தேவையில்லை என்ற முறையிலும் கருத்துத் தெரிவித்தார். விவாத மேடை என்கிறபோது இரு வேறுபட்ட கருத்துக்களும்தான் இடம் பெறும். என்றாலும், ஏ. ஜி. வி. அவர்களும், மணிவர்மா அவர்களும், அதிகாரப் பங்கீடு கூடாது என்ற கருத்தினை வலியுறுத்தும் கட்சியாகவும், திரு. வேழவேந்தன் அவர்கள் பங்கீடு தேவை என்ற கட்சியிலுமாகப் பிரிந்து வாதிக்கும் போது, கழக எம். எல். ஏ. - யின் கட்சியினை ஏற்கவேண்டு மென்பதில்லை யென்றாலும், வாதத்தினையாவது கேட்கும் பண்பினைப் பெற்றுக்கொண்டிருக்கலாம். அதனை விடுத்து ஒரு கருத்தினை எடுத்துரைக்க முயலும்போது குறுக்கிட்டு பிரச்னையினை முடித்துவைக்க, அரங்கத் தலைவர் முன்வருதல் வருந்தத்தக்கது. அனைத்திந்திய வானொலி அமைப்பு என்பது மத்திய அரசுக்குச் சொந்தமானது என்பதும். அதன் பிரசார பீரங்கியே அது என்பதும் அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் உறவு முறை—அதிகாரப் பங்கீடு என்று ஏற்படும்போது அது நடுநிற்க முனைய வேண்டும். இல்லையானால், நடுநிலையான தன்மையில் வாதம் நடைபெறத் தக்கதாக ஏற்பாடு செய்யவேண்டும். முடியவில்லையாயின் ஒதுங்கியாவது இருக்கவேண்டும். எல்லாவற்றையும் குட்டை குழப்பிவிட முயல்வது வருந்தத்தக்கது மட்டுமல்ல—கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

கேட்டீரா/ சேதி!

அவையெல்லாம் அந்தரத்தில்!

எல்லாரும் ஒரு முறை கை தட்டுங்கோ! சூ மந்திரக்காளி! ஓம், ரீம், ரீங்...இதோ, இந்த அம்மிக் கல்லை பாருங்கோ! சரி. எல்லாரும் கண்ணை மூடுங்கோ! மூடிக்கிட்டிங்களா? சரி. கண்ணைத் திறக்கலாம்! பாத்தீங்களா! அம்மிக்கல் எங்கே? காணுமா? சரி, மேலே பாருங்கோ! தெரியுதா! ஆமாம்! யார் உதவியும் இல்லாமே அது இப்போ அந்தரத்திலே நிற்குது! சரி. கண்ணை மூடித் திறங்கோ! இப்போ கீழே கிடக்குதா? என்று வித்தைக்காரர்கள் வேடிக்கை செய்து காட்டுவதைக் கண்டிருக்கிறோம். ஆனால் விண்வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந்த 'கொலம்பஸ்' கலத்தின் விமானி காலின்ஸ் இதுபோன்ற ஒரு அற்புதத்தை விண்வெளியிலிருந்து, பூமண்டலத்துக்கு டெலிவிஷன் மூலம் செய்துகாட்டி யிருக்கிறார், ஒரு கரண்டியை அவர் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார். அதில் தண்ணீர் நிரம்பி இருக்கிறது. "இப்போது இந்தக் கரண்டி தண்ணீரைக் குடிக்கப் போகிறேன்; அதிக நீர் ஊற்றிவிட்டேன் போலிருக்கிறது; அது சிந்தப் போகிறது" என்று கூறிக்கொண்டே கரண்டியைக் கவிழ்க்கிறார். தண்ணீர் கீழே சிந்தவுமில்லை — கொட்டவுமில்லை. கரண்டியுடனேயே ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவர் சொல்கிறார்; "இங்கு தலை, கீழ் என்பது ஒன்றுமே இல்லை. எல்லாமே ஒன்றுதான்!" என்று. இன்னொரு விளையாட்டு. ரொட்டியில் இறைச்சியை எடுத்துத் தடவுவதற்கு குவளையை எடுக்கிறார். கை தவறுகிறது. கையிலிருந்து குவளை விடுபட்டது. கீழே விழவேண்டுமல்லவா! அதுதான் இல்லை, அப்படியே அந்தரத்திலேயே அது நிற்கிறது! அது போலவே ரொட்டியும் கையை விட்டு அந்தரத்தில் நிற்கிறது! கலத்துக்குள்ளேதான்! இதற்கான காரணத்தை எடையின்மையும், ஈர்ப்புத் தன்மையின்மையும்தான் என்று அவரே விளக்குகிறார்! சூ மந்திரக் காளி என்று கழைக் கூத்தாடும் போது கண்டவை அற்புதங்கள்! ஆனால் இது!...இதுதான் அறிவின் முதிர்ச்சியோ ஆற்றலின் சாதனையோ

நெருக்கடிக்கு-ஒரு பதவி!

"துணைப் பிரதமர்" என்ற பதவியும், மரபும் மொரார்ஜி தேசாயுடன் முடிவடைந்து விட்டதாகத் தெரிகிறது. மொரார்ஜிதேசாயின் உயரிய மதிப்பையும் அந்தஸ்தையும் கருதி உருவாக்கப்பட்ட இப்பதவியில் மீண்டும் அவரே கருத்து வேறுபாடுகள் நீங்கி, பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலொழிய, வேறு எவரும் நியமிக்கப் படமாட்டார்கள் என்பதுடன், இது போன்ற துணைப்பிரதமர் பதவியே இராது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவிதமான நெருக்கடியின் அடிப்படையில் இந்திரா அம்மையார் துணைப் பிரதமர் பதவியை உருவாக்க ஒப்புக்கொண்டதுபோல் நேருவின் காலத்திலும்சர்தார் வல்லபாய்படேலுக்காக ஒருமுறை உருவாக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் வரலாற்றில் மேலும், மொரார்ஜியும் படேலும் பிரதமர் என்ற அந்தஸ்தோடு இடம்பெற்றதுசிறப்புக்குரியது என்றாலும், நெருக்கடி நிலைக்குரியது —துணைப்பிரதமர் பதவி என்பது வருந்தத்தக்கதுதான்!

ராஜாஜிக்குத் தெரியாதோ!

இந்திரா காந்தியைப் பதவியை விட்டு விலக்க வேண்டுமென்று, பெருமதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் தம் 'சுயராஜ்யா' இதழில் கருத்தறிவித்திருக்கிறார்கள். இதற்கான காரணம், பிரதமர், சோஷலிசத் திட்டத்தின் அடிப்படையில், பாங்கிகளை நாட்டுடைமையாக்கி அறிவித்தது தான் என்பது வெளிப்படை. ராஜாஜி அவர்களின் சுதந்திராக் கட்சி சோஷலிசத்தத்துவத்துக்கு எதிரிடையானது என்பதும் அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் சோஷலிசத்திட்டத்தைச் செயல் படுத்தும் வகையினால் பிரதமர் தம் பதவியைத் துறக்கவேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகத் தெரியவில்லை. மூதறிஞர் கூறும் அறிவார்ந்த அரசியல் கருத்தாகவும் அது விளங்கவில்லை. கொள்கையோடு கொள்கையினை மட்டுமே மோதச்செய்ய வேண்டும். இது ராஜாஜிக்குத் தெரியாதது மல்லவே!

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 3—8—69 | இதழ் 3

அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்!

தமிழகமும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுட கவலை நீங்கிக் களிப்புறும் விதமாக பொதுச்செயலாளர் மற்றும் நிருவாகிகள் தேர்தல் நடைபெற்று முடிந்திருப்பது பாராட்டத் தக்கதாகும் கழகம், தனக்கேற்பட்ட ஒரு பயங்கரமான சோதனையில் வியக்கத்தக்க வகையில் வெற்றி பெற்றுவிட்டது.

பொதுச்செயலாளர் பதவிக்கு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், புதிய பதவியான தலைவர் பதவியில் கலைஞர் கருணாநிதி அவர்களும், பொருளாளராக எம். ஜி. ஆர். அவர்களும் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

தமிழகக் காங்கிரசாருக்கு கழகத்தின்மீது எப்போதுமே நீங்காத காதல் உண்டு. தலைவர்கள் ஒருவருக்கொருவர் காய்ந்துகொள்ள மாட்டார்களா? தாக்கிக்கொள்ள மாட்டார்களா? கழகம் விரிசல் அடையாதா? சேறு கலங்காதா? மீன் கிடைக்காதா என்ற அந்தக் காதல், பாவம் கைக்கிளையாய் ஆகி, கவலை குடையத்தக்க நோயாகவும் ஆகிவிட்டது. கழக நிருவாகிகளைத் தேர்ந்தெடுக்கும் இந்தத் தேர்தலை மையமாய் வைத்து, காங்கிரசுக்காரர்கள் கண்ட கனவுகள் ஏராளம். அனைத்துக் கனவுகளின் மீதும், இடி விழச் செய்து, தூள் தூளாக்கிவிட்ட பெருமையை வழக்கம்போல கலைஞர் அவர்களே தட்டிக்கொண்டிருக்கிறார்.

இத்தேர்தல் பற்றி கலைஞர் அவர்கள் குறிப்பிடும் போது, "நீர் முட்டி, நீர் விலகாது" என்ற கருத்துச் செறிவுடைய உவமையைக் குறிப்பிட்டார்கள். கழக எதிரிகளில் சிலர் கருதியது போல கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும் எந்த வகையிலும் ஒருவருக்கொருவர் குறைந்த பெருமைக்கு உரியவர்கள் அல்லர். இரண்டு கண்களில் எந்தவொன்றுக்குத் தனிச் சிறப்பு என்று எவரும் கூறமாட்டார்கள். இந்த நிலையில் நாவலர்—கலைஞருக்கிடையே போட்டி எனும்போது,

> "ஒருவர், மற்றொருவரைவிட உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ நினைத்தால் சமத்துவம் இருக்க முடியாது. சரிநிகர் சமானமாக இருப்போரிடையே எந்த ஒருவரும் மேலோங்கி இருக்கவும் முடியாது."

என்ற மேனாட்டு மேதை ஒருவரது பொன்மொழியைத்தான் நினைவுகூர்ந்து கொள்ளவேண்டிய நிலைமைக்கு நாடும், மக்களும் ஆளாக்கப்பட்டார்கள்.

உண்மையிலேயே போட்டி ஏற்பட்டுவிடும் என்று காங்கிரசார் மட்டுமல்ல—கழகத் தோழர்களேகூட நம்பவேண்டிய சூழ்நிலைகள் உருப்பெற்றபோது, தோழர்கள் பெரிதும் குழப்பமடைந்தனர் என்பதை மறைக்கத் தேவையில்லை.

கழக நலனில், வளர்ச்சியில், எதிர்காலத்தில் கலைஞருக்கும் சரி, நாவலருக்கும் சரி அக்கறை குறைவு என்று எவராலும் கூறமுடியாது. எனவேதான் மலையும், மலையும் மோதுகிறதே என்ற ஆழ்ந்த கவலையால் தோழர்கள் பீடிக்கப் பெற்றிருந்தனர்.

கழகமும், அதன் ஆட்சியும் இன்னும் பல்லாண்டுக் காலத்துக்கு இந்த நாட்டுக்குத் தேவை என்பதனை அறிவிக்கும் ஒரு திருப்பமாக, போட்டியேதுமின்றி, குழப்பமேதுமின்றி. கவலையினை வடித்துத் தரும் நிகழ்ச்சிகளேதுமின்றி தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அமைப்பின் சட்டவிதிகள் சில திருத்தம் பெற்று, அதிலே விதி 15 பிரிவு 3ன்படி தேர்ந்தெடுக்கப்படும் அவைத்தலைவர், இனி தலைவர் என்ற பெயரோடு மட்டும் அழைக்கப்படுமாறு மாற்றப்பட்டுள்ளதுடன், தலைவர், தலைமைச் செயற்குழு பொதுக்குழு, கழகப்பொது மாநாடு ஆகியவற்றுக்குத் தலைமை வகிப்பார் என்றும் ஆக்கப்பட்டுள்ளது.

இதுபோலவே, பொதுச் செயலாளரும், தலைவரும் இணைந்து பல காரியங்களாற்றும் புதிய நிலையினையும் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது.

ஆட்சிமன்றக் குழுவும் சிறிய திருத்தத்துக்கு ஆளாகி, அது ஒன்பதின்மரைச்கொண்டு இயங்கவும், அவர்களில், தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளரோடு, மேலும் 6 பேர் கொண்ட குழுவாக அது இனி இயங்கும் என்றும் வகுக்கப்பட்டுள்ளது.

கழகத் தோழர்களில் சிலர், இது கலைஞருக்கு வெற்றியா? நாவலருக்கு வெற்றியா என்ற வகையிலே வீண் சர்ச்சைகளிலே ஈடுபடும்படியான சூழ்நிலைகளை காங்கிரஸ் ஏடுகள் சில கிளப்பிவிட்டு, சிண்டு முடியும் பணியிலே ஈடுபட்டு வருகின்றன. இதுபோன்ற சர்ச்சைகள் ஏதும் தேவையற்றது மட்டுமல்லாமல், கூடாதனவுமாகும். இருவருக்குமே வெற்றிதான் என்ற வகையில், கழகத்தின் அன்றாடப் பணிகளிலே தோழர்கள் கவனம் செலுத்தவேண்டும். காங்கிரசின் வலையிலே வீழ்வது, தோழர்கள் தங்களுக்கிடையேயான உறவுக்கு ஊறுதேடிக்கொள்வதாகவே முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தம் 35 ஆண்டுக் காலப் பொதுவாழ்வில் நமக்குக் கற்பித்த பாடங்கள் முன்னின்று வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன. அண்ணா அவர்கள் விரும்பியதுபோலவே. கட்சித் தலைமையும், ஆட்சித் தலைமையும் தனித்தனியானவர்களிடம் வந்து சேரத் துணைநின்ற கலைஞர் அவர்களுக்கும், அத் தன்மைக்கு வழிவிட்ட நாவலருக்கும் நம் பாராட்டுக்களைப் படைத்துக்கொள்கிறோம்.

பொருளாளராக எவ்வித போட்டியும் இன்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம். ஜி. ஆர். அவர்களுக்கும் நம் வாழ்த்துக்கள்.

மற்றும் தணிக்கைக் குழுவினராக, போட்டியிட்டு வெற்றிவாகை சூடி வந்துள்ள ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இராம. அரங்கண்ணல். டி. கே. பொன்னுவேலு ஆகியோருக்கும், ஆட்சிமன்றக் குழுத் தேர்தலில் வெற்றிவாகை சூடியோரான அமைச்சர் சாதிக்பாட்சா, பேராசிரியர் அன்பழகன். மதுரைமுத்து, அமைச்சர் மதியழகன், அன்பில் தர்மலிங்கம், அமைச்சர் முத்துசாமி ஆகியோருக்கும் நம் நல் வாழ்த்துக்கள்!

கே. எம். கோபால், மாறுமதுரை.

ஜெயந்தி கப்பல் கம்பெனி நிருவாகி கைது செய்யப்பட்டு விட்டாரா?

அது விவரம் கிடைக்கவில்லை. ஆனால், அவரை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்காக மட்டும் இதுவரையில் 4 75,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கோவிந்தன், கொளத்துமேடு.

ஆடம்பரச் செலவுகள், பிரதமருக்கு அதிகமா? துணைப் பிரதமருக்கு அதிகமா?

துணைப் பிரதமராக விருந்த மொரார்ஜிக்குத் தான் அதிகமென்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. பிரதமரது 18 ஊழியர்களுக்கு மட்டும் 1968ல், 2,08,185 ரூபாய் செலவிடப்பட்டிருக்கும்போது, துணைப் பிரதமர் மொரார்ஜியின் 24 ஊழியர்களுக்கு, 2 81,729 ரூபாய் செலவாம்! இதே காலத்தில் உள்துறை அமைச்சருக்கு 1,82 844 - ரூபாயும், இரயில்வே துறை அமைச்சருக்கு 1,10,780 - ரூபாயும் செலவாகி இருப்பதாகவும் தெரிகிறது.

ஆர். ராமநாதன், சென்னை.

துணைக் குடியரசுத் தலைவர் பதவியாவது, ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனுக்குக் கொடுக்கப்படுமா?

கொடுக்கப்படலாம் என்பதற்கான ஹேஷ்யங்கள், நம்பகமான முறையிலே தெரிவிக்கப்படுகின்றன.

செ. அன்பழகன், கும்மிடிப்பூண்டி.

விண்வெளி வீரர்களான ஆம்ஸ்ட்ராங் முதலிய மூவரையும் இந்தியாவுக்கு அழைத்து, இங்குள்ள சோதிடர்களுடன் ஒரு வாதம் நடத்த ஏற்பாடு செய்தால் எப்படி இருக்கும்?

நந்தா போன்றவர்களது அறிவுக்கண் திறக்க வழியேற்படுவதுடன், சங்கராச்சாரிகள் போன்றவர்களது மடமை நீங்கவும் கூடும்; அதே சமயம் வாரியார் போன்றவர்களது காலட்சேபம் புதிய திசையில திரும்ப வழி வகுக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஜே. ஜோசப், சென்னை.

வெளிநாட்டு பாங்குகள்மட்டும்

வினா-விடை

நாட்டுடைமையாக்கப்படாதது எதைக் காட்டுகிறது?

இந்தியக் குடிமகன் ஒருவனுக்கு வழங்கப்படாத தொழிலுரிமை, வெளிநாட்டாருக்கு வழங்கப்படுகிறது என்பதைகுறிக்கிறது.

மு. செல்லையா, நெல்லை.

சிலைத் திறப்புக்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

வருங்காலத்துக்கு, நிகழ்காலம் வழிகாட்டும் என்று நினைக்கிறேன்!

ஆர். பாலசுந்தரம், புவனகிரி.

இது காந்தியடிகளின் நூற்றாண்டு விழா ஆண்டுதானே?

இதில்சந்தேகம்வரக்கூடாதே! சந்தேகப்படும்படியாகவா காங்கிரசின் போக்குகள் உங்களுக்குத் தெரிகின்றன?

பொ. வில்வேந்தன், சிதம்பரம்.

'தொழிலமைதி' என்று எதனைக் குறிப்பிடலாம்?

ஒரு தொழிலில், அவரவர்களுக்குரிய வேலைகளில் அவரவர்கள் ஊக்கத்துடன் ஈடுபட்டிருப்பதை என்று குறிப்பிடலாமா!

எல். ரகுபதி, முகவை.

ராஜமானிய ஒழிப்புபற்றி என்ன சொல்கிறீர்கள்?

'எதையும் பனிதப் பண்போடு காண்கிறேன் நான்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருப்பதனை நினைத்துக் கொண்டால், சரியான பதில் கிடைக்கும்.

டி. வேங்கடாசலம், திருப்பத்தூர்.

அந்நிய பாங்குகளை அரசு, ஏற்காமல் விட்டுவிட்டதால் அவை உள்ள பகுதிகளில், அரசு ஏற்ற பாங்குகளுக்கும் ஏற்காதபாங்குகளுக்குமிடையே போட்டி ஏற்படாதா?

போட்டி ஏற்படுவதைவிட, 'டெபாசிட்' செய்யப்படுவதிலே பலவிதமான குழப்பங்கள் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

து. அப்பூதி, தாம்பரம்.

சோவியத் ரஷ்யாவில், தமிழ்ப் பயிற்சியுண்டா?

சில இடங்களில் அரசின் உதவியுடன் பயிற்றுவிக்கப்படுவதாகத் தெரிகிறது. அத்துடன் மாஸ்கோ வானொலி, குறிப்பிட்ட நேரம் வரையில் தமிழ் ஒலிபரப்புக்களையும் நடத்திக்கொண்டிருக்கிறது.

எஸ். அருணாசலம், தஞ்சை.

மொரார்ஜி தேசாயின் அடுத்த பணி எதுவாக இருக்கும்? அனுமானித்துச் சொல்ல முடியுமா?

அனுமானம் எதுவும் தேவையில்லை. இப்போது அவர் தமது வாழ்க்கை வரலாற்றை, ஒரு புத்தகமாக எழுதிக்கொண்டிருக்கிறாராம். இதுவரையில் சுமார் 500 பக்கங்கள் எழுதி விட்டாராம். அவரது அரசியல் வாழ்வில் 1952 வரை வந்து விட்டதாம் அது. இப்போது பதவியில் இல்லாததால் இதனைத் துரிதமாக எழுதி முடித்து 1969 வரையில் வந்துவிடக் கூடுமே!

★

வருந்துகிறோம்

திருவொற்றியூர் நகராட்சித் தலைவர் டி. எஸ். கோபால், ஜூலை 28ம் நாள் மாலை மாரடைப்புக் காரணமாக இயற்கை எய்திய செய்தியறிந்து வருந்துகிறோம். கழகக் குடும்பத்தைச் சேர்ந்த அவரது இழப்பால், துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு நமது இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

தம்பி

சுகஸ்தான்வாசி...

அமைச்சர் அடித்து அடித்துப் பேசுகிறாராம், வடக்கு தெற்கு என்றெல்லாம் பேசுவது தவறு — பெருந்தவறு — விஷமிகளின் கூக்குரல் என்று பேசுகிறாராம், போகுமிடமெல்லாம்!! தெற்கே தொழில் சிறிதளவு குறைவுதான் —என்கிறார். உடனே மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்—செய்ததும், கூட்டம் பிடித்தவனைக் காண்பவர்கள், ஐயா! கொஞ்சம் எட்டி நில் என்று கூறியதும், கோபம்கொண்டு கண்டபடி ஏசுவானல்லவா அந்நிலை பெற்றவராகி, 'இதற்காக ஏன் கத்துகிறீர்கள்! யார் உங்களைத் தொழில் நடத்த வேண்டாமென்று சொன்னவர்கள்? யார் உங்கள் கையைப் பிடித்துத் தடுத்தவர்கள்? என்று வெளுத்து வாங்குவதாக எண்ணிக்கொண்டு, வகை முறைகெட்ட நிலையில் வசைமாரி பொழிந்து கொண்டு வருகிறாராம்!

இது, தம்பி! தொழில் நடத்த விரும்பியவரின் கையைப்பிடித்து மட்டுமல்ல, அவருடைய முதுகில் குத்தி, மூக்கினை அறுத்து, மூலையில் டில்லி உட்காரவைத்த சோகக் காதை.

வடக்கே தொழில்வளம் பெருகிவிட்டதே, தெற்கு தேய்ந்துவிட்டதே என்று பேசிக்கொண்டு இருப்பவர்களின் போக்குகூட இருக்கட்டும் தெற்கிலே தொழில் வளரவேண்டும், பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு பிழைக்கும் வழி கிடைக்கவேண்டும், நேரு பண்டிதர் ஓயாமல் வற்புறுத்தி வருகிறாரே அதற்கேற்ப, உற்பத்தி பெருகவேண்டும், செல்வம் கொழிக்கவேண்டும் என்பதைப் பேச்சளவில் விட்டுவிடாமல், செயலுக்குக் கொண்டுவர விரும்பி. துவக்கிவிட்டுத் துடிதுடிக்கும் தொழிலதிபரின் துயரகீதம் இது.

தூத்துக்குடியிலும அதன் வட்டாரத்திலும், உப்பளம் ஏராளம். இங்கு கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக்கொண்டு, மிகப்பெரிய சோடா உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டார்கள்.

சோடா உப்பும், அதனைத் தயாரிக்கும்போது உடன் தயாராகக்கூடிய குளோரைன் —குளோரைட்— இலிமினைட—போன்றவைகளும், கனரகத் தொழிற்சாலைகளுக்கு மிகமிகத் தேவைப்படுவன.

தெற்கே, கனரகத் தொழில் வளர்ச்சி காணவேண்டுமானால், குளோரைட். குளோரைன், இலிமனைட், காஸ்டிக் சோடா. போன்ற இவைகளின் உற்பத்தி வளமாகவேண்டும்.

இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்றது, தூத்துக்குடி வட்டாரம், என்ற உண்மையை நிபுணர்கள் ஒப்புகின்றனர்.

சோடா உப்பும். இதுபோன்ற பொருள்களும், வெளிநாடுகளிலிருந்தே வரவழைக்கப்படுவது பொருள் பாழாகும் முறை, இந்தமுறை நீடிக்குமட்டும இங்கு புதுப்புது கனரகத் தொழில் வளருவது கடினம, எனவே சோடாஉப்பு உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை அமைப்பது அவசியமதான் என்பதை இந்திய சர்க்காரின பாதுகாப்பு அமைச்சர் குழுவே எடுத்துக் காட்டிற்று.



துரோகம், வஞ்சகம், கழுத்தறுப்பு ஐயா!

நிபுணர்கள் ஒப்பம் அளித்தனர், ஆய்வுக் குழுவினர் திட்டம் தேவைதான் என்றனர். இந்தப்பொருள்களை உபயோகிக்கும் பல்வேறு தொழிற்சாலையினரும், வரவேற்றனர்.

குறிப்பாக ஜவுளி ஆலைத் தொழிற்சாலையினர் மகிழ்ச்சி தெரிவித்தனர்; அனைவரும் கூடி இந்திய சர்க்காரிடம் முறையிட்டு, தூத்துக்குடியில் இந்தத் தொழில் துவக்கிட ஆதரவு அளிக்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

இதுபோன்ற தொழிற்சாலை பெரிய அளவில், வேறு எங்கும் இல்லை.

இதற்கு கனரகத் தொழிற்சாலை ரசாயனப் பொருள் உற்பத்திக் கம்பெனி, அமைக்கப்பட்டது. மூலதனம் ஒருகோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

1953-ம் ஆண்டில், இந்த ஒருகோடி ரூபாய் கம்பெனியின் துவக்கவிழா விமரிசையாக நடந்தேறியது.

துவக்க விழா நடத்தினவர் மைசூர் மகாராஜா!

தம்பி! இப்போது அந்தத் தொழிற்சாலை இயங்கவில்லை!!

அது குறித்தே இந்தத் துயரகீதம் வெளிவந்திருக்கிறது.

ஒருகோடி ரூபாய் முதல் திரட்டி, நடத்தத் திட்டமிட்டு மும்முரமாக ஆரம்ப வேலைகளை நடத்தி வெற்றி பெற்று, 17 இலட்ச ரூபாய் வரையிலே பங்குத்தொகை திரட்டிவிட்டனர். சென்னை சர்க்காரும், 10 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் தொழிற்சாலையில் பங்கு எடுத்துக்கொள்வதாக வாக்களித்தது.

இங்ஙனம் நிபுணர்களின் ஆதரவைப் பெற்று, பிரமுகர்களின் ஆசியைப் பெற்று, துவக்க விழாவிலே மைசூர் மகாராஜாவின் வாழ்த்துக்களைப்பெற்றுத் துவக்கப்பட்ட தொழிற்சாலை, இன்று மூடுவிழாவுக்கு முகூர்த்தம் பார்க்கவேண்டிய நிலைக்கு வந்துவிட்டிருக்கிறது! ஏன் என்று நிதி அமைச்சரைக் கேள் தம்பி. ஏனா? உங்களால் முடியவில்லை! உங்கள் தெற்குக்கு அவ்வளவுதான் யோக்யதை!" என்று கொதித்துக் கூறுவார். ஆனால் அவருக்கும் உண்மை விளங்கினால், கோபமல்ல, கண்ணீர் வரும்.

தொழிற்சாலை அமைப்புக்காக நூறு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது; பாதைகள், பாதை ஓரத்தில் மரம் செடிகொடிகள், காரியாலயக் கட்டிடங்கள், அவைகளைச் சுற்றி கிராதிகள், காம்பவுண்டுகள், வேலிகள், தோட்டங்கள், யாவும் கட்டப்பட்டன.

சுவிட்சர்லாந்து நாட்டு விஞ்ஞானத் தொழில் நிபுணர்களின் கூட்டுறவு கேட்டுப் பெறப்பட்டது.

கிரெப் கம்பெனியார், இதற்கான இயந்திரம் தரவும், தொழிற்சாலையில் பணியாற்றவும் இசைந்ததுடன் தங்கள் பங்குத் தொகையாக 6 இலட்ச ரூபாய் அளிக்கவும் ஒப்புதல் அளித்தனர்.

சுவிட்சர்லாந்து நாட்டு நிபுணர்களுக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன!

சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து இயந்திரக் கருவிகள் வருவதற்கான ஏற்பாடு முடிந்துவிட்டது.

கிராம்ப்டன் கம்பெனியார் மின்சார சம்பந்தமான இயந்திரங்களை அனுப்பிவைத்துவிட்டனர்.

தொழிற்சாலை அமையும் இடத்தருகே வசதிக்காக இரயில்வே இலாகாவினர் விடுதி அமைத்தளித்துவிட்டனர்.

குடிதண்ணீர் வசதிக்காகப் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டாகிவிட்டன.

தொழிலாளருக்கான விடுதிகள் கட்டுவதற்கான திட்டம் தயாராகி வேலை துவங்கிவிட்டது.

தொழிற்சாலையின் தேவைக்காகவென்றே பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி வரையில் புதிய பாதை அமைக்க ஏற்பாடாகி வேலை நடந்தேறி வருகிறது.

தம்பி! இந்த ஒவ்வொரு வேலை துவக்கப்பட்டு நடந்தேறியபோதும் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டவர்களின் மனதிலேயும், தொடர்பு கொண்டவர்களின் மனதிலேயும் எத்தனை ஆசை ஊறியிருக்கும்?

வேலையற்ற மக்களில் எத்தனை ஆயிரம்பேர் இந்தப் புதிய தொழிற்சாலை எழுவது கேட்டும் கண்டும், இனித் தங்கள் கஷ்டம் தீரும் என்று கருதியிருப்பர்.

ஆனால், தம்பி! 1953ல் மைசூர் மகாராஜாவால் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, இப்போது எந்த நிலையில் இருக்கிறது தெரியுமா? 1956 செப்டம்பர் திங்களில், துயரகீதம் பாடுகிறார்கள்!

துரோகம்! வஞ்சகம்! நம்பவைத்துக் கழுத்தறுப்பது! நம்பினோரை நட்டாற்றில் தள்ளுவது! தூங்கும்போது கல்லைத்தூக்கித் தலையில் போடுவது!—என்று பலப்பல கூறப்படுகிறதே, இந்தத் தொழிற்சாலை சம்பந்தமாக நடைபெற்றுள்ள சம்பவம், இவைகளை எல்லாம் தூக்கி அடிப்பதாக இருக்கிறது.

கனரகத் தொழிலுக்குத் தேவையான ரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக ஒருகோடி ரூபாய் மூலதனத்துடன் நடத்துவது என்று திட்டமிட்டுத் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக ஒரு முறையும் வகுத்தனர்.

முதல் தவணை — அல்லது முதல் கட்டம் ஒன்று; இந்த முதல் கட்டத்தில் நாளொன்றுக்கு ஐந்து டன் சோடா உப்பு தயாராகும் அளவு வேலை நடத்துவது என்றும், ஐந்தாண்டுகள் இம்முறையில் வேலை செய்தான பிறகு, தினசரி பத்து டன் சோடா உப்பு தயாராகத்தக்க விதத்தில் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதென்றும், முறை வகுத்துள்ளனர்.

தென்னாட்டிலே தொழில் வளம் ஏற்படவில்லை என்பதை அமைச்சர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்! வேண்டுமென்றே தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை; ஓரவஞ்சனை நடைபெறவில்லை என்று சமாதானம் கூறுகின்றனர். தென்னாட்டிலே தொழில் நடத்த, பணம் படைத்தோரும், பணத்தைத் திரட்டக் கூடியவர்களும் முன்வரவேண்டும் என்று யோசனை கூறினர்; டாட்டா, பிர்லா என்று கூறி வயிற்றெரிச்சல்பட்டு என்ன பிரயோஜனம், உங்களுடைய அழகப்பாக்களை அழைத்துத் தொழில் நடத்தச் சொல்லுங்களேன் என்று கேலி பேசினர். அவ்விதம் புதிய தொழில்கள் துவக்கப்பட்டால் துரைத்தனம் வரவேற்கும், ஆதரவு அளிக்கும் என்று வாக்களித்தனர். இதனைக் காங்கிரஸ்

'கர்ப்பிணி'யான பின் கண்காணிப்பா!

பேச்சாளர்கள் நமக்கு அவ்வப்போது எடுத்துக் காட்டியும் வருகின்றனர்.

இப்போது, நடைபெற்று வரும் வேடிக்கையைக் கேள், தம்பி! கேள்!

இவ்வளவு வேலைகள் நடந்தான பிறகு—அதற்காகப் பல இலட்சம் செலவான பிறகு—மைசூர் மகாராஜாவின் திருக்கரத்தால் அஸ்திவாரம் அமைத்து: புதிய தொழிற்சாலைக்கான துவக்க ஏற்பாடுகள் பல செய்து முடித்து, நிபுணர்களை நியமித்து, வேலையைத் துவக்கியான பிறகு, இந்திய சர்க்கார் இந்தத் தொழிற்சாலை, தகுந்தபடி நடத்தப்படுமா என்பதிலே எமக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு 'கரடி'யை அவிழ்த்து விட்டிருக்கிறது.

நாளொன்றுக்கு 5-டன் சோடா உப்பு தயாராகும் என்கிறீர்களே—இதுதான் உமது உற்பத்தியின் அளவு என்றால், கட்டிவராதே தொழிலில் இலாபம் வராதே, வீண் கஷ்ட நஷ்டமல்லவா ஏற்படும்—இந்த நிலையில், புதிய தொழிற்சாலையை ஏன் கட்டிக்கொண்டு மாரடிக்கிறீர்கள்—விட்டுத் தொலையுங்கள் என்று இந்திய சர்க்கார், தமது மேலான, ஆலோசனையைக் கூறுகிறது.

எப்படி இந்தத் தொழிற்சாலையைச் சரியான முறையில் நடத்த முடியும்—செலவுக்கும், போடும் முதலுக்கும், எடுத்துக்கொள்ளும் கஷ்டத்துக்கும் ஏற்ற பலன் கிடைக்காதே இதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள் என்று இந்திய சர்க்கார், கேள்வி கேட்கிறது.

தம்பி! எல்லா விவரமும் ஆதாரமும் தேடித் தந்து, புள்ளி விவரக் கணக்குக் காட்டி, திட்டத்தை விளக்கி, திட்டத்துக்கு நிபுணர்கள் ஒப்பம் அளித்ததையும் எடுத்துக் காட்டித்தான், 1953-ல், இந்திய சர்க்காரிடமிருந்து அனுமதி பெறப்பட்டது—இந்தப் புதிய தொழிற்சாலை துவக்க.

இப்போது, இரண்டாண்டுகளுக்குப் பிறகு, துவக்க விழா நடத்தி, ஊன்றிய விதை செடியான பிறகு, கல்லி எடுத்து வேர் ஆழச் சென்றிருக்கிறதா என்று பார்க்கச் சொல்வதுபோல, இந்தத் தொழிற்சாலை நடத்துவது இலாபகரமானதாக இருக்குமா என்பதுபற்றி எமக்குப் பலமான சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது என்ன சொல்கிறீர்கள் என்று டில்லியில் உள்ள சர்க்கார் கேட்கிறது.

மகள் ஆறுமாத கர்ப்பிணியான பிறகு, என் மருகன் குடும்பத்தை வளரச் செய்யக்கூடியவன்தானா என்பது பற்றிய ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே என் இல்லத்துக்கே அழைத்துச் செல்ல எண்ணிவிட்டேன் என்று கூறுபவர் உண்டா! டில்லி இருக்கிறது! ஆண்டு மூன்று ஆகிறது, அஸ்திவாரம் போட்டு! பல இலட்சங்கள் செலவாயின. துவக்க வேலைகளுக்கு! தொழிற்சாலைக்கான தளம் எழும்பிவிட்டது, பாதைகள் அமைந்துவிட்டன! இவ்வளவுக்குப் பிறகு, இந்திய சர்க்காருக்கு, பிள்ளை பிழைக்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாமே, கேட்டனையோ இந்த வேடிக்கையை!!

துவக்கச் சொல்லேன் புதிய தொழிற்சாலைகளை என்று பேசும் அமைச்சர்களுக்குத் தம்பி! துவக்கிய பிறகு ஏற்பட்டுள்ள இந்தத் துயரச் 'சேதி' தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? என்ன செய்தார்கள்? கேட்டுப் பாரேன், காங்கிரசில் உள்ள நல்லவர்களை.

வெடிகுண்டு வீசுவது போல, இந்திய சர்க்கார் வீசிய கேள்வி இருந்தது. எனினும் புதிய தொழிற்சாலை அமைப்பாளர்கள், இந்திய சர்க்காரின் சந்தேகத்தைப் போக்க, புள்ளி விவரங்களை மீண்டும் விளக்கி, 5 டன் உற்பத்தி என்பது, முதல் கட்டத்தில்தான், இரண்டாவது கட்டத்திலேயே நாளொன்றுக்கு பத்து டன் உற்பத்தியாகும், தொழில் கட்டிவரும், பணம் விரயமாகாது, உழைப்பு வீண்போகாது என்றெல்லாம் எடுத்துக் காட்டினர்.

இந்தச் சமாதானத்துக்கு, விளக்கத்துக்கு, இந்திய சர்க்கார் மறுப்பும் தரவில்லை, தமது பழைய புகாரையும் விட்டுவிடவில்லை,

தம்பி! நட்டாற்றில் விடுவது என்கிறார்களே, இது வேறு என்ன?

தூங்கும்போது கல் போடுவதும், துவக்கிட அனுமதி தந்து, வேலைகள் மளமளவென்று வளர்ந்திடும் போது, 'கட்டை' போடுவதும் வேறு வேறா!!

எண்ணிப் பார்க்கச் சொல்லு, நம்மை எல்லாம் பேதம் பிளவு பேசுவோர் என்று எண்ணிக்கொண்டு நிந்திக்கிறார்களே, காங்கிரஸ் நண்பர்கள், அவர்களை!

இத்துடன் இந்தச் சோகக் காதை நின்றுவிடவில்லை. இது போதும், வேதனையைக் கிளற, கதர்ச் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு கழகத்தில் சேர! எனினும், மேலும் நடந்திருக்கும் 'வேலை'யையும் கூறுகிறேன், கேள், தம்பி.

1953-ல் ஆதாரம் காட்டி, அவசியத்தை வலியுறுத்தி புள்ளி விவரம் காட்டி, நிபுணர்களின் ஒப்புதலைக் காட்டி, இந்தத் தொழிற்சாலை அமைக்க அனுமதி பெற்றனர்.

1955-ல் தூத்துக்குடிக்கு அருகேயே, இது போன்ற வகையான புதிய தொழிற்சாலை அமைக்க, வேறோர் தரப்பினருக்கு, இந்திய சர்க்கார் அனுமதி அளித்தனர்.

1953-ல் அனுமதி அளித்து வேலையைத் துவக்கிய தொழிற்சாலை, உற்பத்தி செய்யும் அளவு போதாது என்பதைக் கண்டான பிறகு, மேலும் உற்பத்தியை அதிகமாக்கும் வழி அந்தத் தொழிற்சாலைக்கு இல்லை என்பதைக் கண்டறிந்த பிறகு, மற்றோர் தொழிற்சாலைக்கு அனுமதி தந்தனரா இந்திய சர்க்கார்? இல்லை, தம்பி, இல்லை.

1953-ல் துவக்கப்பட்ட தொழிற்சாலை, உற்பத்தி செய்திடும் நிலைக்கு வரவில்லை—முயற்சி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே, அதே வட்டாரத்தில் வேறோர் தொழிற்சாலைக்கு அனுமதி அளிப்பது ஏன்?

நீதியும் நியாயமும் மடிந்திடக்கூடாது என்ற நல்லெண்ணம் கொண்ட எவரும், அவர் எந்தக் கட்சியில் இருப்பினும், கேட்கவேண்டிய கேள்வி அல்லவா இது? கேட்பார்களா?

1953-ல் அனுமதி அளித்தது, சோடா உப்பு தயாரிக்க! 1955ல் புதிய தொழிற்சாலைக்கு அனுமதி அளித்திருக்கிறோம் என்றால், அது சோடா உப்பு தயா

சொற்சிலம்பம் - ஒரு சோககீதம்!

ரிக்க அல்ல சோடா சாம்பல் தயாரிக்க!—என்று சமாதானம் கூறிட சர்க்காருக்கு மனம் இடம் தருகிறது.

தம்பி! பெயர் ஒன்றுக்கு சோடா உப்பு—Caustic Soda—மற்றொன்றுக்கு S da A-h — சோடா சாம்பல் என்று இருக்கிறதே தவிர, தொழில் முறை, உற்பத்தி வகை ஆகியவை ஒரேவிதம்தான்! எனினும் சர்க்கார் நடத்திய இந்தத் திருவிளையாடலை, சொற்சிலம்பம் செய்து மறைத்திட முயற்சிக்கிறது!

பல் ஆஸ்பத்திரிக்குப் போவானேன்—பல ரூபாய் பாழாக்கிக் கொள்வானேன் என்பதற்காகத் தான், நாலைந்து அறை கொடுத்து இவனுடைய பற்கள் கீழே உதிர்ந்திடச் செய்தேன் என்று போதையில் உள்ள காலி கூடப் பேசமாட்டான். பொறுப்பு அறிந்த சர்க்கார் பொன்னுடாக இருந்த தென்னகம் தேய்ந்திருக்கிறது, மீண்டும் இங்கு திருவும் தெம்பும் ஏற்படப் புதிய தொழில்களை அமைத்தாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பணியாற்ற வேண்டிய சர்க்கார்,

> உங்கள் தொழிற்சாலை, 'கட்டி வரக்கூடிய' முறையில் இல்லை என்று நாங்கள் கருதுவதால், இது நடைபெறுவதைக் குறித்துப் பலமாகச் சந்தேகப்படுகிறோம் என்று சாக்குக் கூறிவிட்டு, இதுபோன்ற வகையினதாகவே வேறோர் தொழிற்சாலை நடத்த, மற்றொருவருக்கு அனுமதி அளித்திருக்கிறது.
>
> இதனை அறம் என்று கூற யார் முன் வருவர்?
>
> இதனை நேர்மையான அரசியல் என்று கூறும் துணிவு கூட எவருக்கும் எழாதே!

1953-ல் ஏற்பட்ட தொழிற்சாலை Caustic Soda தயாரிக்க; 1955-ல் அனுமதி பெற்றிருப்பது Soda Ash தயாரிக்க என்று சொல்லை வைத்துக்கொண்டு 'ஜாலம்' செய்தார்கள்!!

உன் கடையில் இட்லி சாம்பார்! அவன் கடை உன் கடைக்குப் போட்டியாக நான் கிளப்பிவிடுவது என்று எண்ணிக்கொள்ளாதே, அவன் கடையில் இட்லி சட்னிதான், சாம்பார் கிடையாது, என்று சொன்னால், அதற்குப் பெயர் சமாதானமா!!

சில நாள்தான் இந்தப் போலிவாதம்கூட!

இப்போது, 1955ல் அனுமதி பெற்ற, புதிய தொழிற்சாலையினர் (Caustic Soda) சோடா உப்பு தயாரிக்கவும் உரிமை பெற்றுவிட்டார்கள்!

இப்போது நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்த்திடலாம் வா, தம்பி!

ஒரு கோடி ரூபாய் மூலதனம் ஏற்பாடு செய்து, அதற்கான பங்கு பெற, என்னென்ன முயற்சிகளில் ஈடுபட வேண்டுமோ அவை யாவும் செய்து முடித்து, துவக்க விழா நடாத்தி, வேலையைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது, 1953ல் அனுமதி பெற்ற கம்பெனி,

இதற்குக் கழுத்தில் கத்திவைப்பது போல, அதே தூத்துக்குடி வட்டாரத்திலேயே, வேறோர் அமைப்புக்கு அனுமதி வழங்கிற்று, டில்லி.

வாழவைக்கும் வழியா இது? தொழிலை வளர்த்திடும் இலட்சணமா? மூன்று ஆண்டுகள் முயற்சியும், செலவான பணமும் குப்பைதானே!!

தம்பி! இனி, இந்தத் துயரச் சேதியின் உச்சத்தைக் கவனி.

1953ல் அனுமதி பெற்று இப்போது ஊசலாடிக் கொண்டிருக்கும் கம்பெனிக்கு அமைப்பாளர், ரோச் விக்டோரியா!

1955ல் அனுமதி பெற்றுக் கிளம்ப வந்திருக்கும் கம்பெனி T. V. சுந்தரம் ஐயங்காருடையது!!

பக்கத்திலே, யாராவது, 'பாரத மாதாவின் பிள்ளை' இருந்தால், இந்தச் சேதியைக் கூறிவிட்டு, அவர் முகத்தைக் கவனித்துப் பார், தம்பி!

ரோச் விக்டோரியா தூத்துக்குடித் தொழிலதிபர்—காங்கிரஸ்காரர், இப்போதைய M. L. A. முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்!

T. V. சுந்தரம் ஐயங்கார், காங்கிரஸ்காரராக இருந்ததில்லை!

ரோச் விக்டோரியாவின் முயற்சியில் மண்ணைப் போடுவானேன்? சுந்தரம் ஐயங்கார் கம்பெனிக்கு சந்தன தாம்பூலம் அளிப்பானேன்?

ரோச் விக்டோரியா மூன்றாண்டுகளாக எடுத்துக் கொண்ட முயற்சி என்ன கதி ஆவது?

அஸ்திவார விழாவன்று அவர், பாபம், மைசூர் மகாராஜாவின் பக்கத்திலே நின்றுகொண்டு, பூரிப்புடன் புதிய தொழிற்சாலை பற்றிப் பேசியபோது, அவருடைய மனக்கண் முன்பு, ஓங்கி நிற்கும் புகை போக்கிகளும், உருண்டு கிடக்கும் இருப்புச் சக்கரங்களும், உற்பத்தியாகும் சரக்குகளும், அவைகளை ஏற்றிச் செல்லும் பெட்டிகளும், கிடைத்திடும் இலாபத்தைக் கொட்டி வைத்திடும் கொட்டடியும் இலாபம் தேடித்தர உழைத்திடும் பல்லாயிரம் பாட்டாளிகளும், தோன்றி இருந்திருக்கக்கூடும்!

நாமோ காங்கிரஸ்காரர், கழகம் அல்ல!

பிரமுகர் வரிசையிலே மட்டுமல்ல தொழில்



கற்றுக் கொண்ட பாடம் அது!

"அண்ணா அவர்கள் சாகவுமில்லை—தூங்கவுமில்லை; விழித்துக்கொண்டுதானிருக்கிறார்! நாம் தவறு செய்யும்போது, நம் தலையில் குட்டுவார் என்பது நமக்குப் புரிந்துவிட்டது. இப்போது ஏற்பட்ட சோதனைகளிலிருந்து மீண்டது, எவருடைய தனிப்பட்ட திறமையினாலுமல்ல — நம்மை அணு அணுவாக வளர்த்து ஆளாக்கிவிட்ட அண்ணன் நமக்குக்கற்றுத்தந்தபயிற்சி—பாடமே யாகும்!

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி.

சம்பூரணமாகிவிட்ட நேராயணம்!

அதிபர் பட்டியலிலே, நமது பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரஸ் அமைச்சராகவேகூட இருந்திருக்கிறோம்.

வல்லவனுக்கு, வடக்காவது தெற்காவது—எல்லாம் ஒன்றுதான்!!

டில்லியில் நமது குரலுக்கு மதிப்பு எப்படியும் இருந்தே தீரும் என்று பலப்பல எண்ணிக்கொண்டிருந்திருப்பார்.

எல்லாவற்றிலும் இடிவிழுவதுபோல, 1955ல் T. V S. கம்பெனிக்கு அனுமதி அளித்தது, இந்திய சர்க்கார்.

இப்படி ஒரு பேரிடி வந்து விழும் என்று ரோச் எப்படிக் கருதியிருக்க முடியும். தொழிற்சாலை அமைப்பிலே தீவிரமாக ஈடுபட்டார், தேவையான இயந்திரங்கள் அனுப்பப் படுவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதால், ரோச் விக்டோரியா, சுவிட்சர்லாந்து நாட்டுக்கே சென்று இயந்திரங்களைச் சேகரம் செய்தாராம்!

தொழிற்சாலையோ புதிது, ஆனால் தேவையானது; மூலதனமோ ஒருகோடி; முயற்சியில் ஈடுபட்டவரோ தொழிலதிபர்; வளர்ச்சியோ குறிப்பிடத்தக்க அளவில்; எனினும் 1955ல் T. V. S. கம்பெனிக்குப் புதிய அனுமதி கிடைக்கிறது! நிலைமையை, இப்போது ஆராய்ந்து பார்க்கலாம், நமது காங்கிரஸ் நண்பர்கள்!

வெட்கமாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது என்று கூறுவர் இரண்டோர் காங்கிரஸ்காரராவது. அவர்களைக் கண்ணீர்விடச் சொல்லாதே, தம்பி, இன்னுமோர் 'சேதி'யைக் கேட்டுவிட்டு, பிறகு வேண்டுமானால், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளட்டும்.

ரோச்விக்டோரியாவின் முயற்சிக்கு உலைவைக்கத்தக்கதாக, T. V. S. கம்பெனியார், புதிய தொழிற்சாலைக்கு அனுமதி பெற்றார்களல்லவா, அவர்கள் அந்த அனுமதியை தாரங்கதாரா ரசாயன தொழிற்சாலை எனும் வேறோர் கம்பெனிக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார்கள்! இந்தக் கம்பெனி, வடநாட்டுக்காரருடையது!

தம்பி! சம்பூரணமாகிவிட்டதல்லவா, நேராயண ! இப்போது, சொல்லச் சொல்ல வடநாடு என்ன போக்கில் தென்னாட்டை நடத்துகிறது என்று.

துக்கம் தொண்டையை அடைக்கிறது என்பர் தூய உள்ளத்தை இழந்திடாத, காங்கிரசார்.

சென்னை சர்க்காரிடம் முறையிடலாமே! காமராஜர், தமிழராமே, தமிழ் நாட்டுக்குத் தாழ்வு வரவிடமாட்டாராமே! அவரிடம் மனுச் செய்யலாமே!—என்று முணுமுணுப்பர், சிலர்.

எல்லா முறைகளையும் செய்து பார்த்து, ஏமாற்றப்பட்ட நிலைக்கு வந்துற்ற பிறகுதான், மாஜி மந்திரியும், இன்றைய காங்கிரஸ் M. L. A.-யுமான ரோச்விக்டோரியாவே 1956 செப்டம்பரில், இந்தத் துயரச் 'சேதி'யை அச்சிட்டு, அனைவருக்கும் வழங்கி இருக்கிறார்!

இப்படியெல்லாம் இடுக்கண் வந்துற்றதால், என் முயற்சியை விட்டுவிடுகிறேன் என்று அவர் அந்த அறிக்கையில் கூறவில்லை

இப்படி எல்லாம் நடப்பதால், நண்பர்களே! நாட்டவரே! விழிமின்! எழுமின்! இந்த விபரீதப் போக்கைக் களைமின்! என்று முழக்கமிடும் முறையிலே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மாளிகையின் பெயர் சுகஸ்தான் என்று தெரிகிறது! தம்பி! சுகஸ்தானில் இருப்பவருக்கே, திராவிடஸ்தான் அமைந்தாலன்றி நாடு வாழ வழி ஏற்படாது என்று புத்துணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன் — அவ்வளவு வேதனைக்குரல் தெரிகிறது அந்த அறிக்கையில்.

சென்னை சர்க்காரால் செயலாற்ற முடியவில்லை.

சென்னை சர்க்காருக்கு அதிகாரம் இல்லை.

மத்திய சர்க்காருடைய 'லகா'னில் நாம் இருக்கிறோம்,

இந்தநிலை இருக்குமட்டும் இங்கு வாழ்வும் வளமும் கிடைக்காது.

எனவே அனைவரும் ஒன்றுகூடி எழுமின்.

இந்த இராஜ்யத்துப் பொருளாதார சுதந்திரம் பறிபோகாமல், தடுத்து நிறுத்தவேண்டும்.

உடனே! உடனே! அனைவரும் அனைவரும்!!

இந்த முறையிலே இருக்கிறது, சுகஸ்தானத்திலிருந்து வெளிவரும் அறிக்கை!

பட்டால்தான் தெரிகிறது பலருக்கும்.

உன் அண்ணன், துரும்பைத் தூணாக்கிக் காட்டுகிறான், ரோச்விக்டோரியா காங்கிரஸ்காரர், அவர் இதுபோலெல்லாம் கூறியிருக்கமாட்டார் என்று, தம்பி, உன்னிடம், யாரேனும் சில காங்கிரஸ் நண்பர்கள் வாதாட வருவர். அவர்களின் மேலான பார்வைக்கு இதோ இந்தப் பகுதியைக் காட்டு; இது ரோச் விக்டோரியா வெளியிட்ட ஆங்கில அறிக்கையில் உள்ள வாக்கியங்கள்.

The Madras Government have been approached several times, the Legisl-

பணிகள் நிறைவேருது!

"தலைமைக் கழகம், எதிர்காலத்தில் சீருடனும், செம்மையுடனும் செயல்பட கழகத்தின் எல்லா உறுப்புக்களும் செம்மையாக இயங்கவேண்டும்; எந்த ஓர் உறுப்பு பாழ்பட்டாலும், அது தலைமைக் கழகத்துக்கே கேடு பயக்கும். கழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் எல்லாருடைய மதிப்பையும் பெற்றால்தான் பணி செவ்வனே நடைபெற இயலும்; இல்லையேல் மாற்றாரும் மருளும் அளவுக்கு நாம் நம் பணிகளை நிறைவேற்றமுடியாது.

தி. மு. க. பொதுச் செயலாளர்

நாவலர் நெடுஞ்செழியன்.

ators of the Tinnevelly district have also made representations on behalf of the South Indian Venture, and the public were looking to the state Government to give an encouragement to the scheme.

The Madras Government is however helpless in the matter, for the Government of India in the Commerce and industries department are dictating the policy as to what should be done or what should not be done in the State of Madras.

WE ARE TIED TO THE APRON STRINGS OF THE CENTRAL GOVERNMENT.

It is time therefore that all those who are interested in the industrial development of the South, should join hands and see to it that the economic freedom of the State in particular and the South as a whole, is not taken away from us.

சென்னை சர்க்காரிடம் பலமுறை முறையிட்டோம்—பயனில்லை, காரணம், இந்திய சர்க்காரிடமே இந்த அதிகாரம் இருக்கிறது, மத்திய சர்க்காரின் முந்தானையில் முடிபோட்டு வைக்கப்பட்டிருக்கிறது சென்னை—தென்னகத்துத் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டோரனைவரும், செயலாற்றி, இந்த இராஜ்யத்துக்கு சிறப்பாகவும், பொதுவாகத் தென்னகத்துக்கும் உள்ள பொருளாதார சுதந்திரம் பறிபோகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை, காரசாரமான முறையிலே ஆங்கில மொழியிலே, ரோச் வெளியிட்டிருக்கிறார்.

தாம் ஈடுபட்ட ஒரு தொழில் முயற்சியிலே ஏற்பட்ட இடுக்கண்; அதிலே டில்லி சர்க்கார் காட்டிய போக்கு, அதிலே சென்னை சர்க்காரின் செயலற்ற தன்மை, அதிகார மற்ற நிலை, இது மனதிலே உறுத்தியதும், ரோச்விக்டோரியா, தாமோர் காங்கிரஸ்காரர், அமைச்சராகக்கூட இருந்தவர், பாரத நாடு என்ற பரந்த மனப்பான்மையைக் கொள்ளவேண்டியவர் என்ற எதற்கும் கட்டுப்பட முடியா நிலைபெற்று, கொதித்தெழுந்து, கேண்மின்! தோழர்காள்! கேண்மின்! என்று கூவுகிறார். எங்கே போயிற்று; டில்லி போதிக்கும் தேசீயம்!! போலி தானே!! சமயத்திலே, அந்தத் தேசீயம், தேய்கிறது மாய்கிறது. இயற்கை உணர்ச்சிதான் மேலோங்கி வருகிறது!!

ரோச்விக்டோரியா இந்த நிலையைக் கண்டதால், இனி நாட்டுக்கு மத்திய சர்க்காரின் ஆதிக்கப்போக்கை எடுத்துக்காட்டி, இந்த இராஜ்யத்துக்கும் தென்னகத்துக்கும் பொருளாதார சுதந்திரம் கிடைத்திடச் செய்யும் பணியில் ஈடுபட முற்படுவாரா, என்று என்னைக் கேட்டுவிடாதே, நான் திருப்பி உன்னைக் கேட்பேன், கவர்னராக இந்த நிலையிலேயே, கொதித்துப்பேசினாரே இதுபோல, குமாரசாமி ராஜா, அவர் என்ன செய்தார் பிறகு, என்று!

இவர் போன்றாரின் பேச்சு, நாம் மேற்கொண்டுள்ள கொள்கை, அப்பழுக்கற்றது என்பதை நமக்கு உறுதிப்படுத்த உதவுவது. வேறு விளைவுகளை நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்த்துப் பயன் இல்லை.

சோடா உப்புக்கு அனுமதி கிடைத்தும் பயனில்லை என்றால், இத்தகைய முதலாளிமார்களுக்கு சுவை ஊட்ட டில்லியிடம் வேறு பண்டங்களா கிடைக்காது! இவர்களும், நாடு வஞ்சிக்கப்படுகிறது நாங்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டோம், உயர் பதவி தந்தாலும் வேண்டோம், இலாபச் சுவை ஊட்டினாலும் சீந்தமாட்டோம், என்று சீறிப் போரிடக் கிளம்புவர்?

சுகஸ்தானத்தில் அல்லவா அவர்கள் வாசம்!

தம்பி! உனக்கும் எனக்கும், நம்போல, உள்ளவர்களுக்கும் தான் இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பணியாற்றி வெற்றி காணும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்தப் பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்—இடையிடையே எரிச்சல் காரணமாகவோ ஏமாற்றம் கண்டதாலோ, இப்படிச் சிலர், உண்மை நிலைமையை எடுத்துக் கூறும்போது, நாம் மேற்கொண்டுள்ள பணி நியாயமானதுதான் என்று நமக்கு உறுதியும் உவகையும் ஏற்படுகிறது! அதுவரையில் அவர்கட்கு நாம் நன்றி கூறிக்கொள்ளத்தானே வேண்டும்.

நாளைக்கே, ரோச் விக்டோரியாவுக்கு சாந்தியும் சமாதானமும் சந்தோஷமும்கூட அளித்திடும் சக்தி டில்லிக்கு உண்டு—பெற்றுத் தருவதாகச் சாகசம் செய்யும் திறம் காமராஜ் சர்க்காருக்கு நிரம்ப உண்டு! எனவே, மீண்டும் அவர்கள் இந்தியா—இந்தியர்—என்று பஜிக்கத்தொடங்கிவிடக்கூடும். ஆனால் அவர்களின் இந்தத் தேசிய பஜனை, உதட்டளவு என்பதும், உள்ளத்தில் இடம்பெற்றதல்ல என்பதும், அவ்வப்போது, பீறிட்டுக்கொண்டு வருகிற பேச்சுகளிலே தெரிகிறதல்லவா! அது நல்லதல்லவா, நமக்கும் நாட்டுக்கும்! அதனாலேயே, இந்தச் சம்பவத்தை எடுத்துக் கூறினேன், உனக்கும் உன் மூலம் நாட்டவருக்கும்.

ஆனால், இதுமட்டும் போதுமா! பிற இடங்கட்கும் உலகுக்கும், இந்தச் சம்பவங்களை எடுத்துக்காட்டி, நமது கழகத்தின் நோக்கத்தை விளக்கவேண்டாமா? ஆங்கில ஏடு மூலம்தானே அதனைச் செய்ய முடியும்.

ஆம்! அண்ணா! என்றுதான் சொல்கிறாய்! அன்புடன் சொல்கிறாய்! ஆனால், சந்தா? அது வரக்காணோமே!!

அண்ணன்,



(2—12—56 திராவிட நாடு இதழில்)

நினையாமலிருக்க முடியாது!



"சாதாரண கழகத் தொண்டனாக இருந்துவந்த எனக்கு, இவ்வளவு பெரியபொறுப்பு கழகத்தில்கிடைத்திருக்கிறது என்றால், இதற்கெல்லாம் காரணமான பேரறிஞர் அண்ணா அவர்களை இந்த நேரத்தில் நினைக்காமல் இருக்க முடியாது.

தி. மு. க. பொருளாளர் எம். ஜி. ராமச்சந்திரன்.

கொள்ளை!

— புலவர். பொன்னிவளவன் —

"பூவின்தேன் கொள்ளையிடும் வண்டு! ஞானி
புத்தகத்தின் நற்கருத்தை அடிப்பான் கொள்ளை!
கோவிலிலே பகற்கொள்ளை அடித்து நித்தம்
கும்மாளம் போட்டிடுவான் குருக்கள்! மற்றோர்
பாவினிலே நல்லவற்றைக் கொள்ளை யிட்டுப்
பாப்புனைவர் சிலசொத்தைக் கவிஞர்! நெஞ்ச
ஓவியமாம் மனைவியின்வாய்ச் செந்தேன் தன்னை
உயர்கவிஞன் இராக்கொள்ளை நடத்து கின்றான்!

கதிர்ஒளியைக் கொள்ளையிடும் நிலவு! நீலக்
கடல்நீரைக் கொள்ளையிடும் திருட்டு மேகம்!
முதிர்ந்தசுவை மாம்பழத்தின் உள்வ ளர்ந்து
முடிந்தவரை கொள்ளையிடும் சின்ன வண்டு!
எதிரிலொரு காவலின்றேல் காயும் நெல்லை
இனத்தோடு கொள்ளையிடும் காக்கை! எங்கும்
எதிலும்தான் கொள்ளை!"என நினைத்தி ருந்தேன்;
என்மனத்தைக் கொள்ளையிட மனைவி வந்தாள்!

"சாப்பிட்டுச் செய்யுங்கள் தியானம்!" என்றாள்.
"சதிகாரி! உனக்கில்லை கவிதை ஞானம்!
கூப்பிட்டாய்; கற்பனையைக் கலைத்தாய்;" என்றேன்.
கொள்ளைஎதோ போனதுபோல் குதிக்கா தீர்கள்!
பாப்புனைந்து கண்டபலன் ஏதும் இல்லை;
பதவியிலே இருந்தாலும் நல்ல கொள்ளை
வாய்ப்புண்டு! அடித்திடலாம் பலபேர் காசை!
வழிபுரியா மனிதர்நீர்!" என்று சொன்னாள்!

பேர்மட்டும் தான்உனக்குக் கமலம்; ஆனால்
பேச்சென்ன வோநாறும் மலம்தான்! நாட்டைச்
சீர்திருத்திச் செப்பனிடப் பதவி யேற்றுச்
சிறக்கின்றார் என்கழகம் தன்னில் உள்ளோர்!
நேர்மாறாய்ப் பேசாதே! கொள்ளை யிட்டு
நிதிசேர்க்கும் ஆட்களவர் இல்லை! என்றேன்
"ஊர்வாயை மூடுங்கள்!" என்றாள். "போதும்!
உன்வாயை மூடிக்கொள் முதலில்!" என்றேன்.

"பேர்பெற்ற பலர்கூட லஞ்சம் வாங்கும்
பேர்வழிதாம் என்கின்றார் மக்கள்!" என்றாள்.
யார்சொன்ன கதையோநீ கேட்டு விட்டு
அளக்காதே என்னிடத்தில்! பதவி விட்டுச்
சீர்கெட்டுக் கிடக்கின்ற கதர ணிந்தோர்
சினத்தோடு—மனத்தினிலே பொறுமை யோடு
ஊர்தோறும் சொல்லிவரும் பொய்யை நீயும்
உண்மையென நம்புவதா?" என்று கேட்டேன்!

"எப்படியோ போகட்டும் உங்கள் ஆட்கள்!
எனக்கென்ன?" எனக்கேட்டாள் "கமலம்! இந்தா!
தப்படிநீ பேசுவது! அறிஞர் அண்ணா
தனைநெஞ்சில் வைத்திருக்கும் தம்பி மார்கள்
அப்படியா இருப்பார்கள்? இல்லை!" என்றேன்
அண்ணாவின் பெயர்சொல்லும் கழகத் தோழர்
தப்புவழி நடக்காமல் இருந்தால் தானே
தமிழ்நாடு நம்பும்?"என்றாள் "ஆமாம்!" என்றேன்!

அன்று கண்ட கனவு!

நிலாத் தரையில் மனிதனின் முதல் காலடி பதிக்கப்பட்டுவிட்டது. ஆனால், நிலாவை மனிதன் எட்ட முடியும் என்று முதன் முதலாக எடுத்துச் சொன்னவர் யார்? என்ன பதில் கிடைத்தது? படியுங்கள் கீழே!

கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்காவின் செயற்கைக் கோள், நிலவை எட்டிவிட்டுத் திரும்பிய போது, ஜெர்மனியில் வசிக்கும் 75வயது கிழவர் பேராசிரியர் "ஹெர்மான் ஓபர்த்"துக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் உலகின், பலபகுதிகளில் இருந்தும்குவிந்தன. விண்வெளி ஆராய்ச்சியில் முன்னோடியாகத்திகழ்ந்தவர்ஓபர்த். அந்தக் காலத்தில் நிலவுப் பயணம் பற்றி இவர் யோசனைகள் வெளியிட்டபோது, உலகம் இவரை எள்ளி நகையாடியது. இன்று தமது யோசனைகள் வெற்றிகரமாகச் செயலாக்கப்படுவது கண்டு ஹெர்மான் ஓபர்த் பெருமிதம் அடைகிறார்.

இளமைப் பருவத்திலிருந்தே ஹெர்மான் ஓபர்த், விண்வெளி குறித்து கனவு கண்டு வந்தார். 1922-ஆம் ஆண்டில் ஹெர்மான் ஓபர்த், தமது பி. எச். டி. பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரையில் "ஏவு கணைத்தொழில்நுட்பம்" பற்றி விவரித்து இருந்தார். "பள்ளிப் பையனின் கற்பனைக் கதை" என்று இது தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் "விண் வெளியில் ராக்கெட்" என்ற தலைப்பில் இந்த ஆராய்ச்சிக் கட்டுரை நூல் வடிவில் வெளியிடப்பட்டபோது, மளமளவென்று விற்பனையாயின. '1929ல் விண்வெளிப் பயண வழிகள்' என்ற தலைப்பில் இதன் திருத்தப் பதிப்பு வெளியிடப்பட்டது. ஏவுகணை ஆராய்ச்சிக்கு இது ஆதாரமாக அமைந்தது எனலாம். பல கட்ட ராக்கெட்டுகள், திரவ எரிபொருள் ஆகியவற்றிற்கு முதன் முதலில் வழி வகுத்தவர் இவரே.

ஜூலிஸ் வெர்ன் எழுதிய விஞ்ஞான கற்பனைக்கதைகளைப் படித்துப் படித்து, "விண் வெளி" கற்பனையில் ஹெர்மானும் "மிதக்க"த் தொடங்கினார். ராக்கெட் தொடர்பான சோதனைகளில் ஈடுபட்டார். மருத்துவப் படிப்பை உதறித் தள்ளிவிட்டு, கணிதம், பௌதீகம், இரசாயனம் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தி 'ராக்கெட்'டுக்கு வடிவமைத்தார்.

'ராக்கெட்' பற்றி மக்களுக்குப் புரியாத காலம் அது. எனவே ஹெர்மானின் ஆராய்ச்சிகள், மற்றவர்களுக்கு வேடிக்கையாகத் தெரிந்தன. எனவே ஹெர்மான் சொந்தக் கிராமத்திற்குச் சென்று பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். "நிலவில் பெண்" என்ற திரைப்படத் தயாரிப்பில் பணி புரிய ஹெர்மான் மீண்டும் பெர்லின் நகருக்குத் திரும்பினார், பெர்லின் வந்த பின்னர், ஹெர்மான், தமது மாணவரான வெர்னர் வான் பிரானுடன் சேர்ந்து ராக்கெட் குறித்து ஆராய்ச்சி செய்தார். பின்னர் 'வி 2' 'ஏ 4' போன்ற ராக்கெட்டுகள் அபிவிருத்திக்கு பாடுபட்டனர்.

உலகப் போருக்குப் பின்னர், ராக்கெட் நிபுணர்கள் யாரும் ஜெர்மனியில் தங்கியிருக்கவில்லை. ஆனால் ஹெர்மான் சிறிது காலம் ஜெர்மனியில்இருந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், பத்திரிகைகளில் கட்டுரை எழுதியும் சம்பாதித்து வந்தார். வசதியாக வாழ்க்கை நடத்த, இப்பணம் போதுமானதாக இல்லை, எனவே ஹெர்மான் அமெரிக்காவுக்குச் சென்று ராக்கெட்டுகள் தயாரிப்பு ஆராய்ச்சிக் கூடத்தில் பணி புரிந்தார். 1958ல் அவர் தாயகம் திரும்பினார். இதன் பின்னரே, இவரது சாதனைகள் வெகுவாகப் பாராட்டப்பட்டன. விண்வெளிப்பயணம் குறித்து, ஹெர்மான் அவ்வப்போது கூறி வந்த யோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன.

சூரிய வெப்பத்திலிருந்து சக்தி பெறக்கூடிய மின்சார விண் வெளிக்கலம் ஒன்றைத் தயாரிக்கவும், விண்வெளிக் கண்ணாடி மூலம், வட துருவப் பனிப் பிரதேசத்தில் பனியை உருகவைக்கவும் ஹெர்மான் திட்டம் தீட்டியிருக்கிறார். அத்துடன் சந்திரனைப் பிளந்து பார்ப்பதற்கும் இவர் திட்டம் தீட்டியிருக்கிறார். நிலவுக்கு மனிதனை அனுப்பும் இளம் பருவக் கனவு இப்போது நிறைவேறுவது போல், மற்ற திட்டங்களும் நிறைவேறும் காலமும் வரக்கூடும்! யார் கண்டார்கள்? (பூ. பி. எஸ்)

உரைகல்

எத்தனை கோடி இன்பம்

ஆசிரியர்: கவிஞர்மணிவேந்தன்

கிடைக்குமிடம்: முத்து நிலையம், அய்யாபுரம்|அஞ்சல்; இலஞ்சி வழி, தென்காசி வட்டம். விலை ரூ. 2-00

பல்வேறுபட்ட ஊர்களில் நிகழ்ந்த பல்வேறு சிறப்பட்ட கவியரங்கங்களில் கலந்துகொண்டு பாடிய பல்வேறு தலைப்புக்கள் கொண்ட கவிதைகளின் தொகுப்பு தான் எத்தனை கோடி இன்பம் என்ற இந்நூல். இந்நூலுக்கு தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் வாழ்த்துரை வழங்கி,

"கவியரங்கக் கவிதைகள், கவிஞர்மணி வேந்தன் எதிர்காலத்திலே படைக்கப் போகும் கவிதைகளுக்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது;

கவிதைகள் ஒவ்வொன்றிலும் சொல்லாட்சி மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதற்கு

"சாதலையே துச்சமென
எண்ணச் செய்யும்
சாதிப்பேய் தனையொழிக்கத்
துணையாய் நிற்கும்"

என்ற வரிகளே சான்றுகளாகும். மேலும் கவிதைத்தொகுப்பில் வருணனைத் திறனும் பாராட்டுக்கு உரியது. கவிதைக்குக் கவிதை கவிஞரின் படைப்புச் சக்தி வளர்ந்துகொண்டு செல்வதைக் காண முடிகிறது. கருத்தும் கலையும் எல்லாக் கவிதைகளிலும் பின்னிப் பிணைந்து மிளிருகின்றன. ஒவ்வொரு கவிதையும் நன்றாகவே அமைந்துள்ளது."—என்று இந்த நல்ல முயற்சியினைப் பாராட்டி வாழ்த்தி இருக்கிறார். கவிஞரது ஆற்றலினை ஏற்கெனவே தமிழகம், பல்வேறுபட்ட ஏடுகள் இதழ்கள் மூலம் நன்கு அறிந்துகொண்டிருக்கிறது. கவியரங்கக் கவிதைகள் என்றால், கவிபடைக்கும் ஆற்றல் மிகுதியும் கொண்ட கவிஞர்குழாம் மத்தியிலேபாடிக் காட்ட எழுதப்படுவனவாகும். இந்த ஒன்றுபோதும், இந்த நூலின் சிறப்புரைக்க.

(1) அண்ணா சமுதாயச் சிற்பி (2) அண்ணல் காந்தி (3) பாலை (4) குயில் (5) பேய் (6) புதியதோர் உலகு செய்வோம் (7) வீரம் (8) வள்ளுவர் பகுத்தறிவாளர் (9) எத்தனை கோடி இன்பம் (10) ஆசை (11) புன்முறுவல் (12) காதல் (13) சாதியியல் அழிவிற்கா? (14) தமிழினத் தலைவன் எங்கே? (15) அண்ணா கவிதை அஞ்சலி என்ற தலைப்புக்களில் பாடல்கள் யாத்துத் தரப்பட்டுள்ளன.

கவியரங்கங்களில் பாடிக்காட்டி, பெருங்கவிஞர்களது ஒப்புதல் பெற்றுக் கொண்ட கவிதைகள் தான் அனைத்தும். எனவே, கவிதை எழுதுவதிலே பெரிதும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருப்போரும், எழுத முயற்சி எடுத்துக் கொண்டு போவோரும் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். களைப்பு நீக்கிக் கொள்ள நல்ல சுவை பானம் இது. —'மு'

சாவு-மனித இயற்கையின் மாருத விதியா....?

—வாசிலி குப்ரேவிச்

இருபதாவது நூற்றண்டில், நாம் காஸ்மிக் வெளியுடன் தொடர்பு கொள்ளுகிறேம்! எனினும், மனிதன் தனது குறுகிய வாழ்நாள் குறித்து முணு முணுத்துக் கொண்டுள்ளான்.

மனிதன் நீண்ட நெடுங்காலம் வாழ்வது சாத்தியமா? ஆம் முடியும் என்பதுதான் எனது பதில். அவன் நீண்ட நெடுங்காலம் வாழ்வது நிச்சயமாக முடியும்.

தனது இணை வெளித் தத்துவத்தை முழுமையாக வரையறுக்கும் முன்னரே, ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மாணமடைந்துவிட்டார். நிலவளத்தின் மர்மங்களை முற்றிலும் விளக்கிக் கூறுவதன் முன்னர் யாரேனும் ஒரு நல்ல விவசாயி இறந்துவிடுகிருன்.

அவர்கள் முடிக்காது சென்ற பணியை வருங்கால சந்ததியினர் முடித்துக்கொள்வார்கள் என்று நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ளுவதா?

நான் ஒரு வயதான விஞ்ஞானி; எனினும், சாவின் தவிர்க்க இயலாமை குறித்து மக்கள் கொண்டுள்ள ஊழ்வலிக் கொள்கை கண்டு நான் பெரிதும் துயருறுகிறேன்.

சாவு என்பது மனித இயற்கைக்கு எதிரானது!

ஒவ்வொரு உயிர்ப் பொருளும் இறக்கத்தான் வேண்டுமென நாம் எவ்வாறு அறிந்துகொண்டோம்? அதற்கு அளிக்கப்படும் உடனடிப் பதில் இதுதான்; அனுபவத்திலிருந்து அறிகிறேம்; சூரியன் பூமியைச் சுற்றிச் செல்லுகிறது என்பதைக்கூட நமது தினசரி 'அனுபவம்' கூறத்தான் செய்கிறது எனினும் அது உண்மை அல்லவே!

மிகப் பெரும் ஒருண்மையை மார்க்ஸ் நமக்குக் கூறிச் சென்றுள்ளார்: 'எதையும் ஏன் என்று கேள்' விஞ்ஞானத் துறையிலும் கூட அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிச்சயமான உண்மைகளைக் கூட அப்போதைக்கப்போது புனராலோசனை செய்வது அவசியமல்லவா?

நான் ஒரு உயிரியல் மாணவனுக இருந்தபோது, எல்லா உயிரினங்களும் முதுமை அடைகிறது என்றும் அவை சாவை அணைத்துக்கொள்வது தவிர்க்க இயலாததென்றும் எனக்குப் போதிக்கப்பட்டது.

எனினும், தாவர பிராணி உலகுடன் எனக்கேற்பட்ட உறவிலிருந்து மேற்சொன்ன அந்த வரையறையை நான் சந்தேகிக்கிறேன்.

எல்லா உயிர்ப் பொருள்களின் அஸ்திவாரமும் புரோட்டோபிளாசமே அது ஒருபொருள் கூறு; தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்வது; தனது சுற்றுப்புறத்துடன் வஸ்துக்களையும், சக்தியையும் மரிமாறிக் கொள்வதன் மூலம், முடிவற்றுத் தனது தன்மைகளை மாற்றிக்கொண்டேயிருக்கும் குணம் படைத்தது அது.

தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளுதல், இனப்பெருக்கம் செய்தல் ஆகிய தன்மைகளில்தான் ஒரு உயிர்ப்பொருள், உயிரற்ற பொருளிலிருந்து மாறுபட்டுள்ளது. தனது சுற்றுப்புறச் சூழலிலிருந்து சில குறிப்பிட்ட மூலங்களை எடுத்து, அவற்றைத் தன்வயமாக்கி, குறிப்பிட்ட வடிவமும் அமைப்பும் கொண்ட பொருளாக வடித்தெடுக்கும்புரோட்டோபிளாசத்தின் தன்மையினது வீச்சு எல்லையற்றது.

உயிர்ப் பொருள், அசாதாரணமான அளவுக்கு நீண்டகாலம் உழைக்கும் திறன் கொண்டதாகவும் உள்ளது பலஇலட்சம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த 'பாப்லார்' மரத்தின் புதையுயிர்த் தடத்திற்கும் தற்போதுள்ள பாப்லார் மரத்திற்கும் எவ்வித வேறுபாட்டையும் காணேம்.

அதன் பொருள் என்ன? 7 அல்லது 8 கோடி ஆண்டுகளாக, தனது மூதாதையர்களது அடிப்படைத் தன்மைகளை அந்த மரம் தன் சந்ததிகளுக்குக் கடத்திக் கொண்டே இருக்கிறது என்பதுதானே!

சில மரங்கள் 10.000 அல்லது 12 000 ஆண்டு காலம் வாழ்ந்ததாகவும் நாம் அறிகிறேம். அதாவது, அவற்றின் வாழ்வுக் காலத்திலேயே பல மலைகள் தரைமட்டமாகியுள்ளன; ஆற்றுப்போக்கு மாற்றமடைந்துள்ளது; அல்லது ஆறுகளே மறைந்திருக்கக்கூடும்; கால நிலைகள் மாறியுள்ளன; கண்டங்களின் உருவம் மாறிக்கொண்டிருந்தன; பல்வேறு நாகரிகங்கள் தோன்றி மறைந்துள்ளன.

அந்தக் காலம் முழுவதும், அந்த மரம் தொடர்ந்து தனது வடிவத்தைப் பெரிதாக்கிக்கொண்டு, தனது இனத்தை நெடுகிலும் பரப்பிக் கொண்டிருந்துள்ளது. உலகில் வேறு எந்தப் பொருளுமே, புரோட்டோபிளாசத்தைப் போன்று அத்துணை நீண்டகாலம் வலிமையுடன், நீடித்திருந்ததில்லை. அந்தப் புரோட்டோ பிளாசம்தானே வாழ்வின்—உயிரின்—வாகனம்!

பிராணி உலகிலும்கூட அதே போன்று நீண்டகாலம் உயிருடன் இருந்தனவற்றைக் காண்பது அசாத்தியமானதன்று. தற்போதும்கூட, வரலாற்றுக்காலத்திற்கு முந்தியசில அபூர்வப பிராணிகள் நமது ஏரிகளில் வசிப்பதாக நாம் கேள்வியுறுகிறேம்.

அவ்வாறு வசிப்பது குறித்தசெய்திகளை நான் உறுதிப்படுத்துகிறேன் என்பதல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு பிராணி வசிப்பது முடியாத காரியம் என்பதல்ல என்பதையே குறிப்பிட விரும்புகிறேன். ஒருவேளை அப்பிராணிகள் தற்போது தங்களது இனப்பெருக்க சக்தியை இழந்திருக்கக் கூடும்.

வரலாற்று ரீதியாகத் தோன்றியுள்ள ஒரு நிகழ்வுதானே மரணம்?

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் சூலை மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித்தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறேம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-8

அடுத்த இதழில்
அறிஞர் அண்ணா அவர்களின்
வெற்றிப்ரீ செல்ல....
என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

அதுஎன்றென்றும் இருந்துவந்துள்ள சிரஞ்சீவி அன்று.

வாழ்க்கை வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் அது தோன்றி அதன் பின்னர், பரிணாமத்தில் அது ஒரு மிக முக்கியமான இயக்க விசையாக மாறிவிட்டது.

இயற்கைத் தேர்வின் மூலம், சூழ்நிலைக்குச் சிறந்த முறையில் தக அமைந்துள்ள உருவங்களை அப்படியே தக்க வைத்துக் கொள்வதை தலைமுறைகள் மாற்றம் சாத்தியமாக்கிற்று.

மரணம் வாழ்வின் பிரம்மா; சாவு இன்றி, பிராணி இனம் மனிதனைப் பரிணமித்திருக்க முடியாது. ஆனால் புதிய இனத்தைத் தோற்றுவிக்கும் போது, அந்தந்த இனத்திற்கு ஒரு 'இயற்கையான' வாழ்வுக் காலத்தை சாவு நிர்ணயிக்கிறது.

மனிதனது உயர்மட்ட வாழ்வுக் காலம் 80 அல்லது 100 ஆண்டுகள் என்று ஏற்கனவே கடவுளால் அல்லது விதியால் நிர்ணயிக்கப் பட்டுவிட்டதாக சிலர் இன்னும் கருதுகின்றனர். ஆனால், கோட்பாடு ரீதியாக, எந்தவித உயர்மட்ட வரம்பும் கிடையாதென்பதே எனது வாதம்.

அதிகபட்சம் மனிதன் எத்தனை ஆண்டுகள் இதுகாறும் வாழ்ந்துள்ளான் என்பதை நாம் அறியோம். சில முதுமை இயல் நிபுணர்கள் அதை 120 என்கின்றனர்; சிலர் மனிதன் 150 வயது வரை வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். வேறு சிலர் 200 அல்லது 300 ஆண்டு காலம் கூட மனிதன் வாழ்ந்தான் என்பதற்கான சான்றுகள் உள்ளன என்கின்றனர்.

அவ்வாறு கூறுதல் கற்பனையோ என்று நமக்குத் தோன்றுகிறது. எனினும் கற்பனைகளிலும் ஒரு சிறிதளவு உண்மையேனும் இருக்கத்தானே செய்யும்! ஆனாலும், அது குறித்து விவாதிக்குமுன்னர், நீண்டகாலம் வாழ்ந்தோர் பற்றிய நிச்சயமான நிரூபணம் தேவை.

மெதுசெலா எத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருப்பார் என்பதுபற்றி நாம் கவலையுற வேண்டாம். எப்படி ஆயுளை நீடிப்பது என்பதைக் கண்டு பிடிக்க முயலுவோமாக! அதாவது, ஒரு உயிர்ப் பொருள் ஏன் முதுமையடைகிறது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஆயுளை நீடிப்பதற்கு வழி வகைகளைக் காணுமுன்னர், மரணத்தின் பிரதான காரணங்களென்ன என்று கண்டுபிடிக்க வேண்டும்.

முதுமையும், சாக்காடும் ஏதோ ஒருவகையில் நரம்பு மண்டலத்துடன் — நரம்பு செல்களுடன் — தொடர்புகொண்டவை. உயிர்க் கிரியைகளின் ஒழுங்கமைவு படிப்படியாகக் குறைந்து வருவதையும், அவற்றின் தீவிரத் தன்மையும் குறைவதையும் நாம் மூப்பின் அடையாளம் என்கிறோம்.

புதிய அடிப்படையில் மனித உளச்செயல் வினைகளைப் பற்றிய விஞ்ஞான ஆராய்வு, விரைவில் வளர்ச்சியடையும் என்று நான் நம்புகிறேன். அப்பொழுது நரம்பு மண்டலத்தைத் தேய்விலிருந்துபாதுகாக்கவும், அதற்குப் புத்துயிர் ஊட்டுவதற்குமான உளசிகிச்சைமுறைகள் கண்டுபிடிக்கப்படலாம்.

முதுமை அடைவது குறித்துப் பல தத்துவங்கள் உள்ளன. செல் குப்பைக் கட்டுப்படுத்தும் டி-என்.ஏ. ஆர். என். ஏ. அமைப்புகளுக்குப் பழுது ஏற்படுவதே மூப்பின் பிரதான காரணம் என்பது ஒரு தத்துவம்.

முதுமையியலை ஆராயும் விஞ்ஞானிகள் அனைவரும் கூடி, மூப்பெனும் நிகழ்ச்சியின் காரணங்களை நிர்ணயிக்க வேண்டும். முதுமை என்பது ஒரு நோயானால், அதனைக் குணப்படுத்த வேண்டும். அல்லது மனித 'குரோம சோம்'களிலுள்ள 'ஜீன்'களில் அவை திட்டமிடப்பட்டிருந்தால், அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

(இக்கட்டுரையின் ஆசிரியர் சிலவாரங்களுக்கு முன்னர்தான் இறந்தார்.)

—நன்றி: "சிவாஜி"

★★★★★★★★★★★★★★★

அண்ணாபோல் ஆவாரோ அம்மானை!

சுளைகீறி வகிடெடுத்த
சுவைமிக்க பலவினுடன்
கிளையேறித் தேன்கூட்ட
சுவைத்திடாதோ அம்மானை
கிளையேறித் தேன்கூட்ட
சுவைத்திடுதல் ஆனாலும்
சிலையானேன் சொற்றேன்போல்
சுவைத்திடுமோ அம்மானை.

இலையென்று சொல்லாமல்
எவர்க்குமீயும் சொற்கேட்டு
சிலையாகி மாற்றானும்
சிரம்தாழ்வான் அம்மானை
சிலையாகி மாற்றானும்
சிரம்தாழ்வான் ஆனாலும்
சிலையாகிப் போனதனால்
யார்தாழ்வான் அம்மானை

இலையென்றுப் போனஅண்ணா
இங்குறங்கல் சேதிகேட்டு
அலைகடலும் தானெழுந்து
அடிபணியும் அம்மானை
அலைகடலும் தானெழுந்து
அடிபணிதல் ஆனாலும்
தலைகவிழ்ந்த மக்களலை
போலாமோ அம்மானை

எந்தவழி எத்தொலையும்
யார்செல்ல முனைந்தாலும்
அந்தவழி அத்தொலையும்
நிழல்தொடரும் அம்மானை
அந்தவழி அத்தொலையும்
நிழல்தொடர்தல் ஆனாலும்
சொந்ததுணை அண்ணாபோல்
தொடர்ந்திடுமோ அம்மானை

பொதியமலைத் தமிழணங்கு
புத்தொளியைப் பெற்றிடவே
புதுக்கவிஞர் பலரிங்கு
பெற்றெடுத்தாள் அம்மானை.
புதுக்கவிஞர் பலரிங்கு
பெற்றெடுத்தாள் ஆனாலும்
பொதுக்கவிஞர் அண்ணாபோல்
ஆவாரோ அம்மானை.

—நா. பா. சாரதி, எம். எஸ்சி.,

★★★★★★★★★★★★★★★

அது என்ன கண்ணீரோ!

[பேசும் மணி]

ஒரே சப்தம், பேரிறைச்சல், தடதடா, கடகடா, என்ற பேரொலியுடன் கூடிய பேரதிர்ச்சி. கர்கர் என்று சுற்றும் இயந்திரத்தின் ஓசை மலைப்பாங்கான வழிகளில் குதிரையின் மீது சவாரி செய்கிறோமோ என்ற உணர்ச்சி. தலையைவெளியே காட்டினால் பிய்த்துக் கொண்டு போய்விடுமோ என்ற பயம். இப்படி எல்லாம் செய்துகொண்டிருந்தது நான் வேலூரிலிருந்து திருப்பத்தூருக்குப் பயணம் செய்துக்கொண்டிருந்த பஸ்தான். இவ்வளவும் பஸ் சென்ற வேகத்தினால்தான் என்று நினைக்கிறீர்களா? இல்லை அந்த சாதுவான பஸ் அந்த கோடியிலே சென்றுகொண்டிருந்த எல்லா வாகனங்களுக்கும் ஒதுங்கி பொறுமையாக வழி விட்டுக்கொண்டுதான் வந்தது. ஏன், வேகமாக சைக்கிளில் வருபவர்களுக்குக்கூட, அது ஒதுங்கி வழி கொடுக்கத் தவறவில்லை.

அது ஒரு பழைய மாடல் பஸ். வெறும் தகரத்தினால்தான் செய்யப்பட்டதோ என்ற சந்தேகம்கூட. மியூசியத்தில் வைக்கப்படுவதற்கு எல்லாத் தகுதியும் அதற்கு இருந்ததென்பதை யாரும் மறுக்கமுடியாது.

எப்படியோ இரண்டு மணி நேர கடின பயணத்திற்குப் பிறகு வேலூரை விட்டு இருபது மைல் கடந்து விட்டோம். பஸ் ஒரு மலை ஓரம் சென்றுகொண்டிருந்தது. கதிரவன் மேற்றிசையில் மறைந்துவிட்டான் என்ற தைரியத்தில் காரிருள் நிலமகளை அப்போதுதான் கவ்விக் கொண்டிருந்தது. வானிலே படர்ந்துவந்த கரிய மேகக் கூட்டங்கள் இருளுடன் சேர்ந்துகொண்டு இடியோசையின் மூலம் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தன. தூற்றல் ஒன்றுஇரண்டு போட்டுக்கொண்டிருந்தது திடீரென்று பஸ் நின்றது. அங்கு சாலையின் ஓரத்திலிருந்து இரண்டு பெண்கள் பஸ்ஸைநோக்கி ஒரு சிறு குடிசையிலிருந்து வேகமாக வந்துகொண்டிருந்தன. அதில் ஒரு பெண் இடுப்பில் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டிருந்தாள். அவள் ஓடிவந்து பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். அவளுக்குப் பின்னால் ஓடிவந்துபஸ்ஸில் ஏறப்போன மற்றொரு பெண்ணை தடுத்து 'ஏறவேண்டாம். பஸ்ஸில் இடமில்லைஒரு ஆளுக்குத்தான் இருந்தது'' என்றார் கண்டக்டர். அப்பெண், கண்டக்டர் தடுத்தும் பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். ''என்னம்மா அது? நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீ பஸ்ஸில் ஏறிக்கொண்டாயே! கீழே இறங்கு இடமில்லை. இருந்தால் ஏற்றிக்கொள்வதற்கென்ன? அதற்குதானே பஸ்ஸை ஓட்டுவது. நம்ம ஜனங்களுக்கு என்ன சொன்னாலும் இது தெரிவதில்லை. கீழே இறங்கு நேரமாச்சு, பஸ்போகணும் என்றார் கண்டக்டர்.

''இல்லை சார், நான் ஒருத்திதான் சார்.''

''நான் சொல்வது ஒருத்தருக்குத்தான், இரண்டுபேருக்கல்ல.''

''எப்படியாகிலும் தயவு பண்ணுங்க சார், மூன்று மைல் தூரத்திலிருந்து நடந்து வந்திருக்கிறேன். இருட்டிப் போய்விட்டது. தூற்றல் வேறு வந்துவிட்டது. நான் மறுபடியும் இந்த இருட்டிலே போக முடியாது சார். எனக்கு வேறு யாரும் துணைக்கு ஆளில்லை. தெரிந்தவர்களும் கிடையாது.''

''நான் என்னம்மா செய்வது அதற்கு? உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் தோன்றுது. இந்த தொழிலே தர்ம சங்கடமான தொழில். உனக்கு மனமிரங்கி நான் ஏற்றிக்கொண்டால் என்வேலையே போய் விடுமே? என்னை யார் காப்பாத்துவாங்க? நீ தயவு செய்து இறங்கிவிடம்மா உனக்குப் புண்ணியமா போயிடும்.''

''இல்லை சார் கொஞ்சம் பெரிய மனசு வையுங்க கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு முக்கிய விஷயமா இன்றைக்கே திருப்பத்தூர் போகணும் சார்'' என்று சொல்லிவிட்டு தன் முந்தானையில் முடிப் போட்டு வைத்திருந்த ஒரு சீட்டை எடுத்துக்கண்டக்டரிடம் கொடுத்துவிட்டு அவள் கண்களில் துளிர்த்துக் கொண்டிருந்த நீரை முந்தானையில் துடைத்துக்கொண்டு சோக முகத்துடனும், ஏக்கத்துடனும் கண்டக்டரின் முகத்தைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

கண்டக்டர் சீட்டைப் படித்துவிட்டு அந்தப் பெண்ணை இரக்கமிகுந்த பார்வையோடு பார்த்துவிட்டு, குழந்தையுடன் பஸ்ஸில் ஏறிய பெண்ணின் பக்கம் திரும்பி ''நீ இறங்கு என்றார்,'' அந்தப்பெண் அவரையேபார்த்துத்தயங்கிநின்றாள் ''சீக்கிரம் இறங்கு வண்டி இன்றைக்கு லேட்டாப் போச்சி. என்னை ஏன் பார்த்துக் கொண்டிருக்கின்றாய்?'' என்று சற்று கடினமாகவே கூறினார். அப்பெண்ணும் உடனே இறங்கி விட்டாள். இவ்வளவும் மூன்று நிமிஷத்தில் நடந்துவிட்டது. பிறகு பஸ் தன்பயணத்தை அதனுடையபாணியிலேதொடர்ந்து கொண்டிருந்தது.

எனக்கும் என் பக்கத்திலிருந்தவர்களுக்கும் கண்டக்டரின் செய்கை மிகுந்த வருத்தத்தையும், கோபத்தையும் உண்டாக்கியது, இப்போது எங்களுடன் பயணம் செய்து கொண்டு வந்த பெண்ணைக் கவனித்தோம். அவள் மிகுந்த சோகத்துடன்தான் உட்கார்ந்துக்கொண்டிருந்தாள். முதலில் நாங்கள் அவள் நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டோம். அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும்? இது பஸ்ஸில் அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு சாதாரண விஷயமே. ''பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த பெண்ணை அதுவும் ஒரு கைக்குழந்தையுடன் இருப்பவளைக் கண்டக்டர் இறக்கிவிட்டது நியாயமோ? என்னதான் அவருக்கு அதிகாரமும், உரிமையும் இருந்தாலும் அப்படிச் செய்யலாமா? எவ்வளவு பெரிய அநியாயம்! மோசம் இது?'' என்று எங்களுக்குள் 'குசுகுசு'வென்று பேசிக்கொண்டோம். கண்டக்டரிடம் இதைக் கேட்க நாங்கள் யாரும் விரும்பவில்லை.

எங்களுள் ஒருவர் ''இதிலும் சிபார்சு, ரெகமென்டேஷன் இருக்க வேண்டும்போல் தெரிகிறது'' என்றார்.

மற்றொருவர் இருக்கும்,:இருக்கும். இல்லாவிட்டால் சீட்டைப் பார்த்ததும், பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த பெண்ணை கீழே இறக்கிவிடுவாரா? கண்டக்டர். பெரிய இடத்து சிபார்சாக இருக்கலாம்'' என்றார்.

இதெல்லாம் இப்படி விடப்படாது. அவ்வப்போது இதைக் கண்டிக்கணும். இந்தக் கண்டக்டருக்கு கற்பிக்கணும். திருப்பத்தூர் பஸ்ஸ்டாண்டில் இறங்கியதும் ஒரு கம்ப்ளைண்ட் எழுதி முதலாளிக்குப் போட்டிடுவோம். மந்திரிக்கும் அதன் நகல் ஒன்று அனுப்பிடுவோம் என்றார் வேறொருவர். எல்லோரும் "அதுதான் சரி" என்றோம். திருப்பத்தூர் போய்ச் சேர்ந்ததும் அவ்விதமே செய்துவிட்டுத்தான் அவரவர்கள் வீட்டுக்குப் போனோம்.

ஒருவாரம் கழித்து வேலூரிலிருந்து அதே பஸ்ஸில் நான் பயணம் செய்தேன். கண்டக்டர் பக்கத்தில் நான் உட்கார்ந்து கொண்டேன். எனக்குப் பக்கத்தில் ஆஜானுபாகுவான ஒரு மனிதர் தும்பைப் பூ போன்ற வெள்ளை ஆடையை அணிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

வண்டி வேலூரைவிட்டு சிறிது தூரம் சென்றதும் கண்டக்டரைப் பார்த்து "போன திங்கட்கிழமை இதே பஸ்ஸில் ஒரு கண்டக்டர் இருந்தார். ஆள் கொஞ்சம் கருப்பா, ஒல்லியா, உயரமா இருந்தார், அவர் இப்போது எந்த ரூட்டிலே போகிறார்! என்று கேட்டேன்.

"ஏன் சார்'? என்றார் அவர்

உண்மையான காரணத்தைச் சொல்ல நான் விரும்பவில்லை ஏதோ கேட்டேன் சார்" என்றேன்.

'ஓ! அவரா? ராமு கண்டக்டர் சார் தானே? அவருக்குப் போன வாரம் பிரமோஷன் கிடைச்சுட்டது இப்போது அவர்தான் எங்க கம்பெனியில் சீப் செக்கிங். நல்ல சம்பளமும்கூட, என்று சொன்னார்.

எனக்கு கபீரென்றது. வேதனையோடும். கோபத்துடனும் "உங்கக் கம்பெனி முதலாளி சுத்த பைத்தியக்காரனாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த கண்டக்டர் செய்த அட்டூழியத்திற்கு அவனை வேலையிலிருந்தல்லவா நீக்கி இருக்க வேண்டும்? நாங்கள் பொதுமக்கள் எழுதுகின்ற கம்பளைண்டுக்கு உங்கள் முதலாளி கொடுக்கின்ற மதிப்பு இந்த லட்சணத்திலே யிருந்தா, பஸ் நிர்வாகம் எப்படிய்யா ஒழுங்காக நடக்கும்? நாங்கள் போன வாரம் அந்த கண்டக்டர் செய்த ஒரு பெரிய தவற்றைப் பற்றி உங்கள் முதலாளிக்கு எழுதினோம். அவர் அந்த கண்டக்டருக்குப் பிரமோஷனே கொடுத்துவிட்டாரா? எங்கள் முகத்தில் நன்றாகக் கரியைப் பூசிவிட்டார். நீ ஒழுங்காக நடக்கிறாய் போலிருக்கிறது. அதனால்தான் உனக்கு பிரமோஷன் இல்லை" என்றேன்.

இதைக் கேட்டதும் கண்டக்டரின் முகம் வாடி தொங்கிவிட்டது. அவர் என் பக்கத்திலிருந்த அந்த ஆஜானுபாகுவான மனிதரையே அடிக்கடி எதையோ கெஞ்சிக் கேட்பதைப்போல பார்த்துக்கொண்டிருந்தார். அந்த மனிதர் தன் தலையை நிமிராமல் நான் சொல்லிக்கொண்டு வந்ததை மிகுந்த புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார். என் காரசாரமான பேச்சை நிறுத்தியதும் அந்த புன்முறுவலுடன் என்னை அவர் நிமிர்ந்து பார்த்து 'கம்ப்ளைண்ட் எழுதியவர்களுள் நீங்களும் ஒருவரா? என்றார்.

"ஆம்" என்றேன்.

'ரொம்ப சந்தோஷம், மிக்க நன்றி" என்று சொல்லிவிட்டுத் தன் அழகான கைத் தோல்பையை திறந்து ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்து "தயவு செய்து இதைப்படியுங்கள்" என்றார்.

"என் மதிப்பிற்குரிய முதலாளி அவர்கட்கு மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொள்ளும் சமாதான விளக்கம்.

சென்ற திங்கட்கிழமை யன்று மாலை குப்பம் கிராமத்துக்கருகில் பஸ்ஸில் கைக்குழந்தையுடன் உட்கார்ந்த ஒரு பெண்ணை இறக்கிவிட்டு வேறொரு பெண்ணை ஏற்றிக் கொண்டதற்காக என்னை ஏன் வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்று கேட்டிருக்கிறீர்கள்.

முதலில் அப்பெண்ணை ஏற்ற மறுத்தேன். பிறகு அவள் எனக்குக் காட்டிய கடிதத்திலிருந்து அவளது கணவன் ஒரு விபத்தில் சிக்குண்டு ஆபத்தான நிலையில் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருப்பதாகத் தெரியவந்தது. கைக்குழந்தையோடு உட்கார்ந்திருந்த பெண் ஆபத்தான நிலையிலிருந்த தன் வயதான தாயைப் பார்ப்பதற்காகத்தான் திருப்பத்தூருக்குச் செல்ல இருந்தாள். ஆபத்திலிருக்கும் தன் கணவனைப் பார்ப்பதற்காக ஏக்கத்துடன், வருத்தத்துடன் வந்திருந்த அப்பெண்ணுக்கு உதவி செய்வதுதான் அவசியம், நியாயம் என்று எனக்குத் தோன்றிற்று. ஆதலால் அப்படிச் செய்தேன். எனது ஊர் குப்பம். நான் பஸ்ஸிலிருந்து இறக்கிய பெண் என் மனைவி. தவறு இருந்தால் மன்னிக்கவும்.

தங்கள் உண்மையுள்ள,

ராமு.

படித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். பஸ் நின்றுகொண்டிருந்தது. அந்த ஆஜானுபாகுவான அந்த மனிதர் அதே புன்முறுவலுடன் என்னிடமிருந்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கிக்கொண்டார்.

கண்டக்டரைப் பார்த்து "அவர் யார்" என்றேன். "அவர்தான் எங்கள் முதலாளி" என்றார்.

என் கண்களில் அப்போது துளிர்த்துக்கொண்டிருந்த நீரைத் துடைத்துக் கொண்டேன். அது என்ன கண்ணீர்? அது எதற்காகத் துளிர்த்தது?

ஆனந்தக் கண்ணீரா? இல்லை சோகக் கண்ணீரா?

அது என்ன கண்ணீரோ?

★★★★★★★★★★★★★

முகப்பில்:

பெரியகுளம்

நகரமன்றத் தலைவர்

திரு. மேத்தா, M. L. A.

அவர்கள்

★★★★★★★★★★★★★

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.எ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.